செ. முத்துக்குமார்

# சோதிடமலர்

## SOTHIDA MALAR



**உள்ளே..........**

- ✱ இம்மாதம் உங்கள் பலன்
- ✱ சலரோகம்
- ✱ சோதிடம் கற்போம்
- ✱ திருமணங்கள் சொர்க்கத்தில்
- ✱ செவ்வாய் தோஷம்
- ✱ ஆய்வு மன்றம்

இன்னும் பல,

ருதிரோற்காரி பங்குனி மீ (14-3-84 — 12-4-84) ரூ: 3-00

ஆரூட பக்திகுண குஞ்சித பாவசாப
யுக்தை: சிவஸ்மரண-பாணகணை ரமோகை: |
நிர்ஜித்ய கில்பிஷ - ரிபூன் விஜயீ சுதீந்த்ரஸ்
ஸாநந்த - மாவஹதி சுஸ்த்திர-ராஜலக்ஷ்மீம் | |

★

பக்தியால் உலகியல் கஷ்டங்களை போக்கிக் கொள்ளலாம். அல்லது கஷ்டத்தைப் பொருட் படுத்தாத நிலைக்கு மனோபாவத்தை உயர்த்திக் கொள்ளலாம். அலைகின்ற மனசை ஒருமுகப்படுத்திக்கொள்ளலாம். இறைவனின் மங்கள குணங்களை நாமும் பெறலாம், என்றும் அழிவில்லாத சாஸ்வதமான அன்பைப் பெற்று ஆனந்திக்கலாம். முடிவில் பழுத்தபழம் தானாக காம்பில் இருந்து விடுபடுவது போல பூரணமானபக்தி விலகி முக்தி நிலை கைகூடுகிறது.

★

உயர்ந்த எண்ணம் வளர்ந்து வளர்ந்து பல கலைகளாக உருவெடுத்திருக்கிறது. இவ்வெண்ணங்கள் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு விதமாக உருவெடுக்கிறன. சிற்பரூபமாக, சித்திரரூபமாக, நாட்டியரூபமாக, சங்கீதரூபமாக, காவியரூபமாக தியாகவடிவமாக, சேவைவடிவமாக, கொடைரூபமாக இவ்வாறு பல உருவங்களாக உயர்ந்த எண்ணம் வெளிப்படுகிறது. உயர்ந்து பரந்து விரிந்து உண்டாகும் உருவமே எல்லா உயிர்களிடமும் தோன்றுகின்ற அன்பு உலகம் முழுவதும் ஒன்றாகி விடவேண்டும்என எண்ணுகின்ற அன்பில் உண்டாவதே மிகப்பெரியபண்பாடு! இதுவே மனிதவர்க்கத்திற்கு தலையாய கலையாகும்.

★

அறுசுவைகளுக்குள்ளும் அடங்கும் சரக்குகளை வைத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான பட்சணங்களை செய்வதுபோல ஐம்பூதங்களைபலவிதங்களிலும் பலஉயிர்களிலும் கலந்து எல்லாஉயிர்களுக்கும் ஜீவனோபாயம் கொடுப்பதே இறைவனின் அருட்செயலாகும்.


# சோதிடமலர்

SOTHIDA MALAR

சோதிட மாத சஞ்சிகை

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

ருதிரோற்காரி ௵ பங்குனி ௴
( 14 - 3 - 84 )

| மலர் 6 | இதழ் 12 |
|---|---|


## இவ்விதழில் .....................


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் ... | 4 |
| 3 | பங்குனி மாதக் கிரகநிலை ... | 5 |
| 4 | கால ஹோரைகள் ... | 6 |
| 5 | பங்குனி மாத வானியற்காட்சி ... | 7 |
| 6 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? ... | 8 |
| 7 | திருமணங்கள் சொர்க்கத்தில் ... | 17 |
| 8 | சலரோகம் ... | 20 |
| 9 | ஆய்வுமன்றம் ... | 23 |
| 10 | செவ்வாய் தோஷம் ... | 25 |
| 11 | சோதிடம் கற்போம் ... | 26 |
| 12 | மணப்பந்தல் ... | 27 |
| 13 | குறுக்கெழுத்துப் போட்டி ... | 28 |

# நாள் எப்படி?

பங் 1 புத (14-3-84) துவாதசி பி. இ. 2-57 வரை. பூசம் பகல் 1-46 வரை, சித்தம். பகல் 1-46 வரையும் சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 12-21 — 1-51

பங் 2 வியா(15-3-84) திரயோதசி இரவு 11-26 வ. ஆயிலியம் பகல் 11-11 வரை, சித்தாமிர்தம், பிரதோஷ விரதம், பகல் 11-11 முதல் இ. 11-26 வ, நற்கருமங்கள் செய்யலாம். ராகு 1-51 – 3-21

பங் 3 வெ (16-3 84) சதுர்த்தசி பகல் 7-34 வரை, மகம்-மரணம் காலை 8-16 வரை. அதன்மேல் பூரம் பி. இ. 5-09 வரை, சுபகருமங்களை விலக்குக.
ராகு 10-50 — 12-20

பங் 4 சனி (17-3-84) பூரணை பி.ப, 3-41 வ, உத்தரம் பி, இ. 2-05 வரை, மரணம். பூரணை விரதம். பங்குனி உத்தரம். யோகம் நன்றுயில்லை. புதிய கருமங்களைத் தவிர்க்கவும். ராகு 9-20—10-50

பங் 5 ஞாயி (18-3-84) பிரதமை பகல் 11-54 வ. அத்தம் இரவு 11-14 வரை, அ மி ர் த சித்தம். பொதுவாக நற்கருமங்கள் செய்யலாம்.
ராகு 4-49 — 6-19

பங் 6 திங் (19-3-84) துவிதியை காலை 8-26 வரை, அதன் மேல் திரிதியை பி.இ. 5-29 வ, சித்திரை— மரணம் இரவு 8-48 வரை. சுபகருமங்களை விலக்கவும். ராகு 7-49 — 9-19

பங் 7 செவ் (20-3-84) சதுர்த்தி இரவு 3-11 வரை, சுவாதி-சித்தம் இரவு 6-58 வரை, சூரியன் விஷு ரேகையைக் கடக்கும் தினமாகையால் விஷு புண்ணிய காலம் எனப்படும். சுபகருமங்களுக்கு நன்றல்ல. ராகு 3-18 4-48

பங் 8 புத (21-3-84) ப ஞ் ச மி இரவு 1-39 வரை, விசாகம் மாலை 5-52 வரை, சித்தாமிர்தம்; மத்திம சுபதினம். ராகு 12–18 — 1-48

பங் 9 வியா (22-3-84) ஷஷ்டி இரவு 12-58 வரை அனுஷம்-சித்தம் மாலை 5-34 வரை. சுபகருமங்கள் செய்ய நன்று. ராகு 1-47—3-17

பங் 10 வெ (23-3-84) ஸப்தமி இரவு 1-06 வரை, கேட்டை-மரணம் மாலை 6-06 வரை. சுபகருமங்களை விலக்கவும். ராகு 10-46—12-16

பங் 11 சனி (24-3-84) அஷ்டமி சித்தம் இ. 2-02 வரை, அசுபதினம். சுபகருமங்களைத் தவிர்க்கவும்.
ராகு 9-16 — 10-46

பங் 12 ஞா (25-3-84) நவமி பி. இ, 3-37 வரை, பூராடம் இரவு 9-24 வரை, சி த் தா மி ர் த ம். புதிய கருமங்களை விலக்குக. ராகு 4-45—6-15

பங் 13 திங் (26-3-84) த ச மி பி. இ, 5-42 வரை, நற்கருமங்களை விலக்குக. ராகு 7-44—9-14

பங் 14 செவ் (27-3-84) ஏகாதசி முழுவதும், திருவோணம் இரவு 2-44 சித்தம். தோட்டத் தொழில்கள் செய்ய நன்று. ராகு 3-14—4-44

பங் 15 புத (28-3-84) ஏகாதசி காலை 8-04, அவிட்டம் - மரணம் பி. இ. 5-44 வரை, ஸர்வ ஏகாதசி யோகம் நன்றுயில்லை. நற்கருமங்களுக்கு நன்றல்ல.
ராகு 12-13—1-43

பங் 16 வியா (29-3-84) துவாதசி பகல் 10-35, சதயம் - மரணம் முழுவதும். பிரதோஷ விரதம். சுபகருமங்களை விலக்குக. ராகு 1-43—3-13

பங் 17 வெ (30-3-84) திரயோதசி பகல் 1-06 வ. சதயம் காலை 8-44 வரை, சித்தம். அவசிய கருமங்களை காலை 8-44க்கு முன் செய்க.
ராகு 10-43—12-13

பங் 18 சனி (31-3-84) சதுர்த்தசி பி.ப. 3-28 வ. பூரட்டாதி - மரணம் பகல் 11-42 வரை, சுபகருமங்களை விலக்குக. ராகு 9-12—10-42

பங் 19 ஞா (1-4-84) அமாவாசை மாலை 5-34 வ. உத்தரட்டாதி பகல் 2-22 வரை, அமிர்தம். அமாவாசை விரதம், அவசிய கருமங்களை மாலை 5-34 இன் மேல் செய்க. ராகு 4-41—6-11

பங் 20 திங் (2-4-84) பிரதமை இரவு 7-27 வரை, ரேவதி மாலை 4-52 வரை, சித்தம். நற்கருமங்கள் செய்யலாம். ராகு 7-40—9-10

பங் 21 செவ் (3-4-84) துவிதியை இரவு 9-15 வரை, அசுவினி இரவு 7-06 வரை, அ மி ர் த சி த் த ம். இரவு 7-06 வரையும் பூமித் தொழில்கள் செய்ய நன்று. ராகு 3-10—4-40

பங் 22 புத (4-4-84) திரிதியை இரவு 10-33 வரை, பரணி இரவு 8-59 வரை, சித்தாமிர்தம். சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று.
ராகு 12-10—1-40

பங் 23 வியா (5-4-84) சதுர்த்தி இரவு 11-26 வ. கார்த்திகை இரவு 10-29 வரை. மரணம். கார்த்திகை விரதம், சதுர்த்தி விரதம், சுபகருமங்களை விலக்குக. ராகு 1-39—3.09

பங் 24 வெள் (6-4-84) பஞ்சமி இரவு 11-50 வரை ரோகிணி-மரணம் இரவு 11-32 வரை, சுபகருமங்களுக்கு நன்றல்ல. ராகு 10-39—12-09

பங் 25 சனி (7-4-84) ஷஷ்டி இரவு 11-40 வரை, மிருகசீரிடம் இரவு 12-02 வரை, சித்தம். ஷஷ்டி விரதம். நற்கருமங்கள் செய்யலாம். ராகு 9-08 — 10-38

பங் 26 ஞா (8-4-84) ஸப்தமி இரவு 10-57 வரை, திருவாதிரை இரவு 11-59 வரை, சித்தம். சுபகருமங்களை விலக்குக. ராகு 4-37—6 07

பங் 27 திங் (9-4-84) அஷ்டமி இரவு 9-36 வரை, புனர்பூசம் இரவு 11-18 வரை, சித்தம். அசுபதினம். ராகு 7-37 — 9-07

பங் 28 செவ் (10-4-84) நவமி-சித்தம் இரவு 7-40 வரை, பூசம் இரவு 10-02 வரை, ஸ்ரீராம நவமி. அன்றுட பணிகளை மட்டும் செய்க. ராகு 3-06 — 4-36

பங் 29 புத (11-4-84) தசமி மாலை 5.10 வரை, ஆயிலியம் இரவு 8-15 வரை, சித்தம். மத்திம சுபதினம் ராகு 12-06—1-36

பங் 30 வியா (12-4-84) ஏகாதசி பகல் 2-14 வரை, மகம் மாலை 6-01 வரை, அமிர்தசித்தம். ஸர்வ ஏகாதசி விரதம். ராகு 1-36—3-06

# இம்மாத விசேடம்

## பங்குனித் திங்கள்

''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனுர் தாம் வருவார்'' என்னும்படி சிவசக்தியே பத்தினிக் கடவுளாகிய கண்ணகிமூலமாகஅடியார்களின் வழிபாட்டுக்கேற்ற பலனைக்கொடுக்கிருர் என்னும் கூற்றுப்படி பங்குனி மாதத் திங்கள்கிழமை தோறும் அம்பாளுக்கு குறிப்பாக ''கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய'' கண்ணகிக்கு பொங்கல் இட்டு வழிபாடாற்றி வருவதனுல் பங்குனித் திங்கள் சக்திவழிபாட்டுக் குரிய தாயிற்று.

## உத்தரப் பெருநாள்

இறைவனை கல்யாணசுந்தர மூர்த்தியாகக் குறித்து அனுட்டிக்கும் தினமாகும். பங்குனி மாதத்தில் பூமி மீனராசியில் நிற்க சந்திரன் உத்திர நட்சத்திரத்தோடு கன்னிராசியில் நின்று பூரணை கலைபெற்று, பூர்ணமான கிரணத்தை உலகுக்கு அளிப்பதால் இத்தினம் விசேடமாயிற்று. பார்வதி சமேதராக இறைவனைத் திருமணக் கோலத்துடன் தரிசிப்பதால் திருமணவிரதம் எனவும் அழைக்கப்படும். பக்தர்கள் கல்யாணசுந்தர மூர்த்தியாக இறைவனை பொன், வெள்ளி லோகத்தில் சிறிய உருவமாக அமைத்து அதற்கு அபிஷேக ஆராதனைகள் புரிந்து பிராமணதம்பதியரை அழைத்து அவர்களுக்கு உணவு உடை அளித்து பார்வதிபரமேஸ்வரராகப் பூஜித்து, மாலையில் ஆலயம் சென்று வணங்கி இரவு உணவுண்டு தர்ப்பையில் உறங்க வேண்டும். மறுநாள் காலை நித்தியகடமைகளை முடித்து இறைவனையும் இறைவியையும் பூஜித்த பிம்பத்தையும், வேறு தானங்களையும் மனத்திருப்தியுடன் அப்பிராமணத்தம்பதியருக்கு அன்புடன் கொடுத்து அவர்களை வழியனுப்பிவிட்டு சிவனடியாருடன் பாரணை செய்து (போஜனம் முடித்து) விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

## ஸ்ரீ ராம நவமி

ஸ்ரீராமன் ''துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்'' செய்யும் நோக்கமாக உலகில் அவதாரம் செய்ததினமிதுவாகும், மேஷமாத புனர்வசு நட்சத்திரத்தில் சுக்கிலபக்ஷத்தின் ஒன்பதாம் நாளாகிய நவமித்திதியை ராமநவமியாக கொண்டாடுகிருர்கள், வெற்றியும், செல்வமும் நல்லின்பமும் நல்லறிவும், நெடுநாள் வாழ்வும் சித்திக்க வேண்டுமென்பதே இவ்விழாவின் குறிக்கோளாகும்.


## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

ருதிரோற்காரி ஸூ பங்குனி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (14-3-84 முதல் 12-4-84 வரை)

| இங் மார்ச் | தமி பங்கு | வாரம் | மீனம் ம.மி. முதல் (காலை) | மீனம் ம.மி. வரை (காலை) | மேடம் ம. மி. வரை (காலை) | இடபம் ம. மி. வரை (பகல்) | மிதுன ம. மி. வரை (பகல்) | கடகம் ம. மி. வரை (பி.ப) | சிங்கம் ம. மி. வரை (மாலை) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலாம் ம. மி. வரை (இரவு) | விருச்சி ம. மி. வரை (இரவு) | தனுசு ம. மி. வரை (பி.இ) | மகரம் ம. மி. வரை (பி.இ) | கும்பம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | புதன் | 6 21 | 8 03 | 9 53 | 11 55 | 2 7 | 4 14 | 6 15 | 8 14 | 10 18 | 12 28 | 2 36 | 4 32 | 6 17 |
| 15 | 2 | வியா | 6 18 | 7 59 | 9 49 | 11 51 | 2 3 | 4 10 | 6 11 | 8 10 | 10 14 | 12 24 | 2 32 | 4 28 | 6 13 |
| 16 | 3 | வெள் | 6 14 | 7 55 | 9 45 | 11 47 | 1 59 | 4 06 | 6 07 | 8 06 | 10 10 | 12 20 | 2 28 | 4 24 | 6 09 |
| 17 | 4 | சனி | 6 10 | 7 52 | 9 42 | 11 44 | 1 56 | 4 03 | 6 04 | 8 03 | 10 07 | 12 17 | 2 25 | 4 21 | 6 06 |
| 18 | 5 | ஞாயி | 6 07 | 7 49 | 9 39 | 11 41 | 1 53 | 4 00 | 6 01 | 8 00 | 10 04 | 12 14 | 2 22 | 4 18 | 6 03 |
| 19 | 6 | திங் | 6 04 | 7 44 | 9 34 | 11 36 | 1 48 | 3 55 | 5 56 | 7 55 | 9 59 | 12 09 | 2 17 | 4 13 | 5 58 |
| 20 | 7 | செவ் | 5 59 | 7 40 | 9 30 | 11 32 | 1 44 | 3 51 | 5 52 | 7 51 | 9 55 | 12 05 | 2 13 | 4 09 | 5 54 |
| 21 | 8 | புதன் | 5 55 | 7 36 | 9 26 | 11 28 | 1 40 | 3 47 | 5 48 | 7 47 | 9 51 | 12 01 | 2 09 | 4 05 | 5 50 |
| 22 | 9 | வியா | 5 51 | 7 32 | 9 22 | 11 24 | 1 36 | 3 43 | 5 44 | 7 43 | 9 47 | 11 57 | 2 05 | 4 01 | 5 46 |
| 23 | 10 | வெள் | 5 47 | 7 28 | 9 18 | 11 20 | 1 32 | 3 39 | 5 40 | 7 39 | 9 43 | 11 53 | 2 01 | 3 57 | 5 42 |
| 24 | 11 | சனி | 5 43 | 7 24 | 9 14 | 11 16 | 1 28 | 3 35 | 5 36 | 7 35 | 9 39 | 11 49 | 1 57 | 3 53 | 5 38 |
| 25 | 12 | ஞாயி | 5 39 | 7 19 | 9 09 | 11 11 | 1 23 | 3 30 | 5 31 | 7 30 | 9 34 | 11 44 | 1 52 | 3 48 | 5 33 |
| 26 | 13 | திங் | 5 34 | 7 15 | 9 05 | 11 07 | 1 19 | 3 16 | 5 27 | 7 26 | 9 30 | 11 40 | 1 48 | 3 44 | 5 29 |
| 27 | 14 | செவ் | 5 30 | 7 12 | 9 02 | 11 04 | 1 16 | 3 13 | 5 24 | 7 23 | 9 27 | 11 37 | 1 45 | 3 41 | 5 26 |
| 28 | 15 | புத | 5 27 | 7 07 | 8 57 | 10 59 | 1 11 | 3 08 | 5 19 | 7 18 | 9 22 | 11 32 | 1 40 | 3 36 | 5 21 |
| 29 | 16 | வியா | 5 22 | 7 04 | 8 54 | 10 56 | 1 08 | 3 05 | 5 16 | 7 15 | 9 19 | 11 29 | 1 37 | 3 33 | 5 18 |
| 30 | 17 | வெள் | 5 19 | 7 00 | 8 50 | 10 52 | 1 04 | 3 01 | 5 12 | 7 11 | 9 15 | 11 25 | 1 33 | 3 29 | 5 14 |
| 31 | 18 | சனி | 5 15 | 6 55 | 8 45 | 10 47 | 12 59 | 2 56 | 5 07 | 7 06 | 9 10 | 11 20 | 1 28 | 3 24 | 5 09 |
| ஏப்ரி 1 | 19 | ஞாயி | 5 10 | 6 52 | 8 42 | 10 44 | 12 56 | 2 53 | 5 04 | 7 03 | 9 07 | 11 17 | 1 25 | 3 21 | 5 06 |
| 2 | 20 | திங் | 5 07 | 6 49 | 8 39 | 10 41 | 12 53 | 2 50 | 5 01 | 7 00 | 9 04 | 11 14 | 1 22 | 3 18 | 5 03 |
| 3 | 21 | செவ் | 5 04 | 6 45 | 8 35 | 10 37 | 12 49 | 2 46 | 4 57 | 6 56 | 9 00 | 11 10 | 1 18 | 3 14 | 4 59 |
| 4 | 22 | புதன் | 5 00 | 6 41 | 8 31 | 10 33 | 12 45 | 2 42 | 4 53 | 6 52 | 8 56 | 11 06 | 1 14 | 3 10 | 4 55 |
| 5 | 23 | வியா | 4 56 | 6 37 | 8 27 | 10 29 | 12 41 | 2 38 | 4 49 | 6 48 | 8 52 | 11 02 | 1 10 | 3 06 | 4 51 |
| 6 | 24 | வெள் | 4 52 | 6 33 | 8 23 | 10 25 | 12 37 | 2 34 | 4 45 | 6 44 | 8 48 | 10 58 | 1 06 | 3 02 | 4 47 |
| 7 | 25 | சனி | 4 48 | 6 29 | 8 19 | 10 21 | 12 33 | 2 30 | 4 41 | 6 40 | 8 44 | 10 54 | 1 02 | 2 58 | 4 43 |
| 8 | 26 | ஞாயி | 4 44 | 6 25 | 8 15 | 10 17 | 12 29 | 2 26 | 4 37 | 6 36 | 8 40 | 10 50 | 12 58 | 2 54 | 4 39 |
| 9 | 27 | திங் | 4 40 | 6 21 | 8 11 | 10 13 | 12 25 | 2 22 | 4 33 | 6 32 | 8 36 | 10 46 | 12 54 | 2 50 | 4 35 |
| 10 | 28 | செவ் | 4 36 | 6 16 | 8 06 | 10 08 | 12 20 | 2 17 | 4 28 | 6 27 | 8 31 | 10 41 | 12 49 | 2 45 | 4 30 |
| 11 | 29 | புதன் | 4 31 | 6 13 | 8 03 | 10 05 | 12 17 | 2 14 | 4 25 | 6 24 | 8 28 | 10 38 | 12 46 | 2 42 | 4 27 |
| 12 | 30 | வியா | 4 28 | 6 08 | 7 58 | **10 00** | **12 12** | 2 09 | 4 20 | 6 19 | 8 23 | 10 33 | 12 41 | 2 37 | 4 22 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு நழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: பங்குனி 30உ (12-4-84) பகல் 11-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (10-00—12-12) மிதுனலக்னம்

# பங்குனி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

14உ (27-3-84) பகல் 1-17 மேட-புத

20உ (2-4-84) இரவு 9-48 மீன-சுக்

23உ குஜன் வக்ராரம்பம்

9உ புதன் உதயம்

7உ யுரேனஸ் வக்ராரம்பம்

23உ நெப்டியூன் வக்ராரம்பம்

சனி இம்மாதம் வக்ரத்திலேயே சஞ்சரிக்கின்றது.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பங் | 2உ | *(15-3-84)* | பகல் | 11-11 | முதல் | சிங்கம் |
| | 4உ | *(17-3-84)* | பகல் | 10-22 | ,, | கன்னி |
| | 6உ | *(19-3-84)* | காலை | 9-57 | ,, | துலாம் |
| | 8உ | *(21-3-84)* | பகல் | 12-04 | ,, | விருச்சிகம் |
| | 10உ | *(23-3-84)* | மாலை | 6-06 | ,, | தனுசு |
| | 12உ | *(25-3-84)* | பி.இ. | 3-59 | ,, | மகரம் |
| | 15உ | *(28-3-84)* | மாலை | 4-13 | ,, | கும்பம் |
| | 17உ | *(30-3-84)* | பி.இ. | 4-55 | ,, | மீனம் |
| | 20உ | *(2-4-84)* | மாலை | 4-52 | ,, | மேடம் |
| | 22உ | *(4-4-84)* | பி.இ. | 3-24 | ,, | இடபம் |
| | 25உ | *(7-4-84)* | பகல் | 11-51 | ,, | மிதுனம் |
| | 27உ | *(9-4-84)* | மாலை | 5-31 | ,, | கடகம் |
| | 29உ | *(11-4-84)* | மாலை | 8-14 | ,, | சிங்கம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி பங்குனி மீ 30உ பகல் 11-00 மணிக்கு மிதுன லக்னம் என அறிந்து கொண்ட பின் மிதுனம் என்ற கூட்டில் 'ல'என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் பிறநாடுகளுடன் இரகசியத் தொடர்புகள் ஏற்படும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பது கஷ்டம். கள்ளமார்க்கட் வியாபாரங்கள் அதிகரிக்கும். போக்குவரத்துக்களில் பல கஷ்டங்கள் விபத்துக்கள் ஏற்படலாகும். சமயாசார விஷயங்களில் ஆர்வம் குறைந்து காணும். வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்து கொண்டே இருக்கும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்களை இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (பங்குனி மாதம் 1-ந்தேதி முதல் 30-ந்தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 21 நிமிஷம்)

| வாரம் | 6...21<br>7...21 | 7...21<br>8...21 | 8...21<br>9...21 | 9...21<br>10...21 | 10...21<br>11...21 | 11...21<br>12...21 | 12...21<br>1...21 | 1...21<br>2...21 | 2...21<br>3...21 | 3...21<br>4...21 | 4...21<br>5...21 | 5..21<br>6..21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற்கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யழ்ப்பாணம்.

வெளியீடு இல. 44

# பங்குனி மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

14-3-84 – 12-4.84

சூரியன்:- 13-3-84 பின்னிரவு (14-3-84) 6-21ல் மீனராசிப்பிரவேசம்
14-3-84 உதயம் காலை 6-21
அஸ்தமனம் மாலை 6-18
20-3-84 வசந்தவிஷு (சமராத்திரிதினம்)
12-4-84 உதயம் காலை 6-05
அஸ்தமனம் 6-17

சந்திரன்:- 17-3-84 பூரணை பகல் 3-41
24-3-84 அபர அட்டமி இரவு 2-02
1-4-84 அமாவாசை பகல் 5–34
3-4-84 சந்திரோதயம்
9-4-84 பூர்வாஷ்டமி இரவு 9-36

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனமாயிருக்கும் இக்கிரகம் 22-3-84ல் மேற்கில் உதயமாகும். மாதமுடிவில் சூர்யாஸ்தமனத்தின் பின் மேற்குவானத்தில் 14 பாகை உயரத்திற் காணப்படும். 27-3-84ல் மேடராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: காலை வெள்ளியாக மாதத்தொடக்கத்தில் உதயம் முன் கீழ்வானத்தில் 24 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் மாதமுடிவில் 18 பாகை உயரத்தில் காணப்படும். 2-4-84ல் மீன ராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூரியோதயம் முன் உச்சிக்கு மேற்கே 27 பாகை சரிந்து (மேற்கு அடிவானத்திலிருந்து 63 பாகை உயர்ந்து) காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 46 பாகை உயரத்திற் காணப்படும். மாதம் முழுவதும் விருச்சிக ராசியிலே சஞ்சரிக்கும் இக்கிரகம் 5-4–84ல் வக்கிரகதியில் செல்லத் தொடங்கும்.

வியாழன்: மாதஆரம்பத்தில் சூரியோதயம் முன் கீழ் வானத்தில் 72 பாகை உயரத்தில் (உச்சிக்கு 18 பாகை கிழக்கில்) காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு 10 பாகை மேற்கில் காணப்படும். 18-3–84ல் துலா ராசியில் பூராடம் 2-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

சனி: சூரியோதயம் முன் மாதத்தொடக்கத்தில் மேற்கு வானத்தில் 54 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 33 பாகை உயரத்திற் காணப்படும். இம்மாதம் முழுவதும் வக்கிரகதியில் துலா ராசியில் விசாகம் 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கின்றது.

இந்திரன் (Uranus) விருச்சிக ராசியில் கேட்டை 1-ம் பாதத்தில் 20-3-84லிருந்து வக்கிர கதியில் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune) தனுராசியில் மூலம் 3ம் பாதத்தில் 5-4-84 லிருந்து வக்கிரகதியில் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto) துலாராசியில் சித்திரை 4ம் பாதத்தில் வக்கிர கதியில் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்


20-3-84 நள்ளிரவு சந்திரனால் சனி கிரகணமடையும். இந்துசமுத்திரம் நியூசிலாந்து அவுஸ்திரேலியாவில் உள்ளவர்கள் இதனை அவதானிக்கலாம். சந்திரோதயத்தின் பின் நாம் அவதானிக்கும்பொழுது சந்திரனின் வடவிளிம்பை ஒட்டினாற்போல் சனி காணப்படும்.

21-3-84 முன்னிரவு சந்திரனால் செவ்வாய் மறைக்கப்படும். சந்திரோதயத்தின் பின் அவதானித்தால் சந்திரனுக்கு மேற்கில் செவ்வாய் சமீபித்துக் காணப்படும்.

24-3-84 பின்னிரவு சந்திரனுக்கு வடக்கில் வியாழன் 3 பாகை உதயம் முன் அவதானிக்கவும்.

30-3-84 மாலையில் சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 4 பாகை மறுநாள் உதயம் முன் அவதானிக்க.

3-4-84 முற்பகல் சந்திரனுக்கு வடக்கு புதன் 6 பாகை. அன்று அஸ்தமனத்தின்மேல் சந்திரோதயத்துடன் அவதானிக்கவும்.




**டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.**

**14-3-84 முதல் 12-4-84 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத் தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவ்விராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் லோக மூர்த்தியாக 12-ல் வலம் வருவதால் கஷ்ட பலன்கள் அதிகரிக்கும். அட்டமத்துச் செவ்வாயும் விபத்துக்களையும் பொருள் இழப்புக்களையும் பண நஷ்டங்களையும் கொடுக்கும். சுக்கிரன் 11, 12-ல் இருப்பது எதிர்பாலாரால் சிறு நன்மைகள் கிடைக்கவும், இனசனக் கொண்டாட்டங்களுக்கும் நன்று. வரவுக்கு மிஞ்சிய செலவால் கடனாளியாக நேரும். ஆரோக்கியமும் சிறிது சீரற்றுக் காணப்படும். 9-ல் வியாழன் இருப்பதால் தெய்வீக கடாட்சம் உண்டு. எனினும் 7-ல் சனி காரிய விக்கினங்களை ஏற்படுத்தும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சுக்கிரன் நற்சஞ்சாரம் செய்வதால் இல்வாழ்வில் அதிக கஷ்டங்கள் ஏற்படுவதற்கில்லை. ஆயினும் 2-ல் ராகு கடன் தொல்லைகளைக் கொடுத்தவண்ணமிருக்கும். புத்திர விருத்தி களத்திர சுகம் தடைப்படும்,

வியாபாரிகட்கு மாதமுற்பகுதி வியாபார வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை. மாத நடுப்பகுதியில் புதன் ஜன்மராசியில் திக்பலமடைவதால் சுமாரான இலாபமுண்டு. கள்ள மார்க்கட்டில் கூடிய அவதானம் தேவை.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 12ல் மூர்த்தி பலமிழந்து காணப்படுவதால் காரியாலய அமைதி கெடும். எதிர்பார்ப்புக்கள் வீணாகும். மேலதிகாரிகளின் மதிப்பும் மரியாதையுமிருப்பினும் எவ்வித லாபமும் அடைய முடியாது.

விவசாயிகட்கு சனி 7ல் திக்பலம் பெற்றாலும் கமச்செய்கையில் இலாபம் கிடைப்பதற்கில்லை.

பகைவர்களாலும் கள்வர்களாலும் பயிர் நஷ்டங்கள் ஏற்படும். தானிய விற்பனவுகள் சீராக அமைவதற்கில்லை.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தியில்லை. உழைப்பிற்கேற்ற ஊதியமும் இராது. சக தொழிலாளரின ஒத்துழைப்புக்கிடைப்பதரிது. ஆயுதபயம் உண்டு. சினேகித உதவிகளுண்டு.

மாணவர்கட்கு ஞாபகசக்திக் குறைவால் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாக அமைவதற்கில்லை. கலைத்துறையில் ஈடுபாடு இருப்பினும் உடல் சோர்வும் மனச் சோர்வும் பாதிப்பைக் கொடுக்கும். வியாழன் 9ல் இருப்பது உயர்கல்விக்கு நன்று.

பெண்களுக்கு காதலில் தோல்வியும் விவாக முயற்சிகளில் தடையும் ஏற்படும். குடும்பஸ்தர் கணவனின் வேதனையில் பங்கு கொள்ள நேரும். வேலை பார்ப்போர் அமைதியாகக் காலத்தைக் கடத்தலாம்.

அதிஷ்டநாட்கள்: மார்ச் 17 பி. ப, 18, 19மு. ப, 28 பி.ப, 29, 30.

துரதிஷ்ட நாட்கள்: 21 பி. ப, 22, 23 மு. ப, 31, ஏப் 1, 2 மு. ப.



## இடபம்

கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசிரிடம் 1,2 கால்

இவர்களுக்கு சூரியபகவான் தாம்ர மூர்த்தியாக லாபஸ்தானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். 6ல் சனி கடின உழைப்பையும் உடல் உபாதைகளையும் கொடுக்கும். அட்டமத்தில் வியாழன் மன வேதனைகளையும் அவ மரியாதைகளையும் கொடுத்தவண்ணமிருக்கும். 7-ல் செவ்வாயால் பொதுஜன எதிர்ப்புகள் ஏற்படுவதோடு சுற்றுடலில் அமைதியின்மையும் உருவாகும். 10, 11ம் வீடுகளில் இலக்கினாதிபன் சுக்கிரன் தொழில் வளங்களையும் பண வருவாயையும் கொடுக்க ஏதுவாகும். ஜன்மத்தில் ராகுவால் தலைவலி சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம். இனசனக் கொண்டாட்டங்கள் மூலம் மன வேறுபாடுகள் தோன்றலாம்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் லாபஸ்தானத்தில் நீசமடைவது இல்லறச் சிறப்பிற்கு நன்றல்ல. 7-ல் செவ்வாயால் களத்திர சுகம் கெடும். நற்காரிய சிந்தனைகளைத் தவிர்க்கவும்.

வியாபாரிகட்கு வர்த்தக வளர்ச்சிக்கு இடமில்லை. வங்கி உதவிகளும் கிடைப்பதற்கில்லை. வெளிநாட்டு வர்த்தகர்கள் தங்கள் நடவடிக்கைகளை குறைத்தல் நன்று. கள்ள மார்க்கட் அவல நிலையைத் தோற்றுவிக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் லாபஸ்தானத்தில் இருப்பதால் அதிகம் பிரச்சினைகள் இல்லை. இனத்தவர் உதவிகளுண்டு. உழைப்பால் உயர்வடைவீர்கள். சமூக சேவையிலுள்ளோர் குற்றச்சாட்டுகளுக்காளாவர்.

விவசாயிகட்கு சனி 6-ல் உச்சமடைவது விவசாயத்திற்கு ஓரளவு நன்று. அறுவடை சாதகமாயிருக்கும். புதுப்பயிர்கள் நாட்டக் காலம் உகந்ததாகவுள்ளது. பணவசதிகள் உண்டு.

தொழிலாளர்கட்கு உழைப்பிற்கேற்ற ஊதியமுண்டு. புதுத் தொழில் வாய்ப்புகள் கிடைப்பினும் கடைசி நேரத்தில் கைநழுவி விடும். முதலாளிகள் நெருங்கிப் பழகினும் குற்றஞ் சாட்டவே செய்வர்.

மாணவர்கட்கு கல்வித் துறையில் அதிக முன்னேற்றமில்லாவிடினும் பாதிப்பில்லை. கலைத் துறையில் நற்பெயருண்டு. கடின முயற்சி எடுப்பின் பரீட்சையில் சித்தியடைய முடியும். வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கில்லை.

பெண்களுக்கு அழகுசாதனப் பொருட்களால் பணவிரயம் ஏற்படும். கணவனிடம் பகைமைகளை உருவாக்கிக் கொள்வீர்கள். காதல் விவகாரங்கள் அதிகரிக்கும். வேலை பார்ப்போர் தொழில் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 19 பி.ப, 20, 21 மு. ப, 1, 2 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 23 பி. ப, 24, 25, ஏப் 2 பி. ப, 3, 4.



## மிதுனம்

மிருகசிரிடம் 2,3, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 கால்

இவ்விராசியினர்க்குச் சூரியன் இரஜத மூர்த்தியாக 10-ல் திக்பலம் பெற்று இராஜபவனி வருவதால் ஆரோக்கியச் சிறப்பு, எடுத்த கருமம்

கைகூடல். பணவருவாய் பெருகுதல், போன்ற நற்பலன்கள் ஏற்படலாம். இனசன வேற்றுமைகளை மறந்து உறவு கொண்டாடக்கூடிய காலமிது. 5ல் சனி காரிய விக்கினங்களைக் கொடுக்க முனைந்தாலும் இறுதியில் வெற்றியடையலாம். 7-ல் வியாழன் பொதுஜனத் தொடர்புகள் மூலம் நன்மைகள் கிடைக்க வழி வகுக்கும். 6-ல் செவ்வாய் இரகசிய எதிர்ப்புக்களைக் காட்டுமாதலால் சற்று அவதானமாக இருக்கவும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் திக்பலம் பெற்ற சூரியனுடன் கூடியிருப்பதால் குடும்ப அமைதிக்குப் பங்கமில்லை. கடன் தொல்லைகள் நிவிர்த்தியடையும்; 7ல் வியாழனல் களத்திரசுகம், புத்திர முன்னேற்றமுண்டு.

வியாபாரிகட்கு வியாபாரம் இலாபகரமாக இயங்கும். முதலீடுகள் படிப்படியாக நற்பலன் தரும். வங்கி உதவிகள் தாராளமாகக் கிடைக்கும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டோர் முன்னணியில் திகழ்வர்.

உத்தியோகத்தர்கட்கு உத்தியோக உயர்வு, நன்மாற்றங்கள், சம்பளப் பாக்கிகள் கிடைத்தல் போன்ற நற்பலன்கள் கிடைக்கவுள்ளன. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கடன் தொல்லைகள் நிவிர்த்தியாகும்.

விவசாயிகட்கு சனி 5ல் இருப்பதால் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். இருப்பினும் மேலதிகாரிகளின் உதவியுடன் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம். பொதுஜனங்கள் மத்தியில் நல் அபிப்பிராயம் உண்டாகும்.

தொழிலாளர்கட்கு தொடங்கிய வேலைகள் யாவும் படிப்படியாகக் கைகூடும். அரச ஒப்பந்தங்கள் கிடைக்கும். 6ல் செவ்வாயால் எதிரிகள் தொல்லை ஏற்படினும் போட்டிபோட முடியாது. கூட்டுறவில் அரசியல் லாபங்கள் கிடைக்கலாம்.

மாணவர்கட்கு புதன் 10, 11ம் இராசிகளில் சூரியனுடன் கூடிப் பலம் பெறுவதால் கல்வியில் வெற்றியடைய நல்ல வாய்ப்புகளுண்டு. ஞாபக சக்தி அதிகரிப்பால் கல்வியில் நல்ல முன்னேற்றமுண்டாகும். வேலை வாய்ப்புகளுக்கு சந்தர்ப்பமுண்டு.

பெண்களுக்கு சுக்கிரன் கேந்திர திரிகோண ராசிகளில் பவனி வருவதால் காதலர்களால் லாபங்களும், இல்லறச் சிறப்பும், சென்ற இடம் சிறத்தலும் உண்டு. விவாகப் பேச்சுக்கள் கைகூடுதலும் பிரிந்தவர் சேருதலும் ஏற்படலாகும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 21 பி.ப, 22, 23 மு.ப, ஏப் 2 பி.ப, 3, 4.

துரதிஷ்ட நாட்கள்; மார்ச் 26, 27, 28 மு.ப, ஏப் 5, 6, 7 மு. ப.



## கடகம்

புணர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசியில் பிறந்தவர்கட்கு சூரியன் 9-ல் சுவர்ண மூர்த்தியாக ராஜபவனி வருவதால் கடந்த காலங்களில் பட்ட கஷ்டங்கள் படிப்படியாக நிவிர்த்தியடையும். எடுத்த கருமச் சிறப்பும், பணப்புழக்கம் அதிகரிப்பும் உண்டாகும். இனத்தவர் உதவிகள் அதிகரிக்கும். 6ல் வியாழனல் ஆரோக்கியச் சிறப்புமுண்டு. அந்நியர் சேர்க்கையால் பொருளாதார, சரீர உதவிகள் அதிகரிக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். நற்காரிய சிந்தனைகள் உதயமாகும். தொட்ட கருமங்கள் வெற்றியளிக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சூரியன் திரிகோண ராசியில் பவனி வருவதால் களத்திர சுகத்துடன் கூடிய இல்லறவாழ்க்கைச் சிறப்புண்டு. 5ல் செவ்வாய் புத்திர சம்பந்தமான தொல்லைகளைக் கொடுக்கும்.

வியாபாரிகட்கு புதன் திரிகோண கேந்திரங்களில் பவனி வருவதால் கவலைப்பட ஒன்றுமில்லை. 5ல் செவ்வாய் முதலீடுகளில் சில தாக்கங்களை ஏற்படுத்தலாம்; பங்கு வியாபாரத்தில் பாதிப்பில்லை.

உத்தியோகத்தர்கட்கு திரிகோண ராசியில் சூரியன் கூடியிருப்பதால் காரிய சித்தியுண்டு. உங்கள் விசுவாசமான சேவைக்கு அதிகாரிகள் மத்தியில் மதிப்புண்டாகும். சுற்றாடலில் அமைதி நிலவும்.

விவசாயிகட்கு 4-ல் சனியிருப்பதால் கமச் செய்கையில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. நஷ்டஈடுகள், அரச உதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களின் கவலைகள் ஓரளவிற்குத் தீரும். தானிய விற்பனவுகள் சுமாரான லாபம் தரும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தியுண்டு. புதுத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

நண்பர்கள் சகல விதத்திலும் உதவிகள் புரிவர். உங்கள் மனவைராக்கியம் வெற்றியளிக்கும். கூட்டுறவில் நிலைமை சீராகும்.

மாணவர்கட்கு கல்வித்துறையில் நல்ல முன்னேற்றமுண்டு. சட்டக்கல்வி, பொருளாதாரத் துறையில் கல்வி பயில்வோர் நற்பலன் அடைவர். வெளிநாட்டுக் கல்வி பயிலும் மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெறுவர். கல்விக்கு வீட்டு வசதிகள் சாதகமாக அமையும்.

பெண்களுக்கு முதியோர் உதவியுடன் கருமங்களில் வெற்றி காணலாம். காதல் விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். விவாகமானோர்க்குக் கணவனின் முன்னேற்றம் திருப்தியளிக்கும். நற்காரிய எதிர்பார்ப்புகள் வீண்போகாது.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 23 பி.ப, 24, 25,
ஏப் 5, 6, 7 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்; மார்ச் 28 பி.ப, 29, 30,
ஏப் 7 பி. ப, 8, 9 மு,ப.




மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியினர்க்குச் சூரியன் அட்டம ராசியில் லோகமூர்த்தியாக வலம் வருவதால் கஷ்ட பலன்கள் அதிகரிக்கும். 3-ல் சனி சகோதர வழியாலும், அயலவர்களாலும் பொறுப்புக்களையும், தொல்லைகளையும் கொடுக்கும். 4ல் செவ்வாய் வாழ்க்கையில் அமைதியின்மையைக் கொடுக்கும். தேகசௌக்கியம் பாதிக்கப்படும். பணக்கஷ்டங்கள் அதிகரிக்கும். சமூகத்தில் செல்வாக்கு மங்கும். எதிர்பாலாரின் ஆசை வார்த்தைகளில் ஏமாந்து பணத்தைப் பறிகொடுப்பீர்கள். 5-ல் வியாழனுல் நற்காரியங்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட மனது தூண்டும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் அட்டமத்தில் சூரியனுடன் கூடியிருப்பதால் இல்வாழ்க்கையில் சுகம் கிடைப்பதரிது. குடும்பச் செலவிற்கு மேலும் மேலும் கடன்பட வேண்டியிருக்கும். அயலவர்களுடன் மன வேறுபாடுகள் உருவாகும்.

வியாபாரிகட்கு வியாழன் வங்கி உதவிகள் கிடைப்பதற்கு உதவி புரியினும் முதலீடுகளில் இலாபம் கிடைப்பதற்கில்லை. 4-ல் செவ்வாயால் வியாபார ஸ்தலங்களில் அமைதி கெடும். பங்கு வியாபாரம், கள்ள மார்க்கட்டில் கஷ்டம் ஏற்படும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் தொல்லைகள் அதிகரிக்கும். காரியாலய அமைதி கெடுவதால் சேவை செய்ய மனநிலை இடம் கொடாது. மேலதிகாரிகளுடன் சற்று பணிந்து நடந்தால் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம்.

விவசாயிகட்கு சனி 3ல் ஸ்தான பலமடைவதால் சீர்கேடான நிலைமை ஓரளவுக்கு சீராகும். கடின உழைப்பும் குறைந்த ஊதியமும் உள்ளமாதம். பயிர்ச் செய்கையில் இயற்கையழிவுகளை தாக்குப் பிடிக்க வேண்டியிருக்கும்.

தொழிலாளர்கட்கு முதலாளி வர்க்கத்துடன் உறவுகள் நன்ருயிராது. புதிய ஒப்பந்தங்கள் கிடைப்பது குறைவாயிருப்பதோடு கிடைத்த ஒப்பந்தங்களிலும் லாபம் குறைவாகவே இருக்கும். ஒப்பந்தங்களைச் சிறிது காலம் தாழ்த்தல் நன்று.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம் கிடைப்பதற்கில்லை. 5ல் வியாழன் புத்திக்கூர்மையையும், அறிவு வளர்ச்சியையும் கொடுக்க முனையினும், வெற்றி மட்டுப்படுத்தப்பட்டே இருக்கும். கல்லூரி மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களில் எவ்வித வெற்றியும் கிடையாது. காதல் லீலைகளில் திருப்தியேற்படும். எதையும் மன ஓர்மத்துடன் செய்ய முடியாது. கணவன் மனைவியரிடையே பிணக்குகள் வலுக்கலாம். தொழில் பார்ப்போர் மேலதிகாரிகளால் தொல்லைகளுக்காளாவர்.

அதிஷ்ட நாட்கள்; மார்ச் 26, 27, 28 மு.ப,
ஏப் 7 பி.ப, 8, 9 மு.ப,

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 14, 15 மு.ப, 31,
ஏப் 1, 2 மு. ப; 9 பி. ப. 10, 11 மு. ப.




உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

கன்னிராசியினர்க்குச் சூரியன் சுவர்ண மூர்த்தியாக 7-ல் பவனிவருவதால் மகிழ்ச்சியளிக்

க் கூடியதாகி காரியங்கள் நடக்கும். சனி தனஸ்தானத்தில் உச்சமடைவதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். ஆரோக்கியச் சீர்கேடுகள் மெல்ல மெல்ல குறைவடையும். 3-ல் செவ்வாய், சகோதரர், அயலவர்களிடையே மனவேறுபாடுகளைத் தோற்றுவிப்பினும் 4-ல் வியாழன் சந்தோஷமாக வைத்திருக்கும். 6-ல் சுக்கிரன் மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் முன்னின்று உழைக்க வைக்கும். 7-ல் சூரியன் லக்னாதிபதியுடன் கூடுவதால் நினைத்த காரிய சித்தியுண்டு.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் சனி வருமானத்தில் சில உயர்ச்சிகளைக் காட்டும். களத்திரசுகம், புத்திர சுகம் தாராளமாகவுண்டு. இனசன கொண்டாட்டங்களைத் தவிர்த்தல் நன்று. தூரதேசப் பிரயாணங்கள் செய்யச் சந்தர்ப்பம் ஏற்படும்.

வியாபாரிகட்கு வியாபார வளர்ச்சியுண்டு. வங்கி உதவிகள் கிடைக்கும். அழகு சாதனப் பொருள் வியாபாரம் கொள்ளை லாபந்தரும். கள்ளமார்க்கட்டில் தடையேதுமிராது. பங்கு வியாபாரிகள் மத்தியில் இருந்த மனவேறுபாடு நீங்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 7-ல் காரிய சித்திக்கு நன்று. மேலதிகாரிகளின் உதவியுண்டு. வாக்கு வசீகரம் சக உத்தியோகத்தர்களையும், மேலுத்தியோகத்தர்களையும் கவரும். உங்கள் குறைகளுக்கு போதிய நிவாரணம் உண்டு.

விவசாயிகட்கு சனி உச்சமடைவதால் கமச் செய்கையில் லாபத்தை எதிர்பார்க்கலாம். புதுப் பயிர்கள் நாட்டவோ, தானிய விதைப்புக்கோ கிரகநிலைகள் உதவிபுரியும். காணி சம்பந்தப் பட்டதகராறுகளில் சாதகமான முடிவு கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தியுண்டாகும். அரச ஒப்பந்தங்களில் நற்பெயர் வாங்குவீர்கள். தொழில் மாற்றங்கள் செய்ய உகந்த காலம். உங்கள் நீண்டகால அபிலாஷைகள் நிறைவேறும்.

மாணவர்கட்கு பரீட்சைகளில் சித்தியுண்டு. கல்வித்துறையில் புரட்சிகரமான திருப்பங்கள் ஏற்படும். விளையாட்டுத்துறையில் ஊக்கம் ஏற்படினும் வெற்றி நிச்சயமற்றது. கலைத்துறையில் ஈடுபாடு அதிகமாகும்.

பெண்களுக்கு காதல்லீலைகள் அதிகரிக்கும். விவாகப் பேச்சுக்கள் தெய்வீக கடாட்சத்தால் கைகூடும். குடும்பப் பெண்களுக்கு கணவரின் முன்னேற்றம் மனமகிழ்வைத் தரும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 14, 15: மு. ப, 28 பி. ப. 29, 30
ஏப் 9 பி. ப. 10, 11 மு. ப.

துரதிஷ்ட ,, மார்ச் 15, பி.ப., 16, 17 மு.ப.
ஏப் 2 பி.ப, 3, 4, 11 பி.ப, 12.



# துலாம்

சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

துலா ராசியை ஜன்மராசியாகவுடையவர்களுக்கு சூரியன் தர்ம மூர்த்தியாக 6-ல் சஞ்சாரம் செய்வதால் நன்மைகள் அதிகம் சொல்வதற்கில்லை. ஜன்மராசிச்சனி கடின உழைப்பைக் கொடுக்கும்: தனஸ்தானத்தில் செவ்வாய், யுரேனஸ், கேது ஆகிய கிரகங்கள் எதிர்பாராத பணச்செலவுகளை அடிக்கடி உண்டுபண்ணும். 3-ல் வியாழன் சகோதர நன்மைகளையும் உள்ளூர்ப் பிரயாணங்களையும் கொடுக்கும். உங்கள் சேவை மனப்பான்மை புகழ்ந்துரைக்கப்படும். 8-ல் ராகு சமூகங்களுக்கிடையே மன வெறுப்புகளையும் சிக்கல்களையும் உருவாக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானாதிபதி செவ்வாய்தன் சொந்த வீட்டில் ஆட்சியாக விருப்பதால் இல்வாழ்வில் அதிகம் பாதிப்பு ஏற்படாது. எனினும் களத்திரசுகம் குறைவாகவே இருக்கும். கடன்தொல்லைகள் குறைய இடமில்லை.

வியாபாரிகட்கு வர்த்தகத்தில் எவ்வித லாபத்தையும் எதிர்பார்க்க முடியாது. முதலீடுகள் ஓரளவு திருப்தியளிப்பினும் லாபத்தைக் காண முடியாது பங்கு வியாபாரிகளிடையே பிரிவினைகள் தோன்றும். கள்ளமார்க்கட்டில் கடும் சோதனை ஏற்படும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் ஸ்தான பலம் பெற்று இருப்பதால் அதிகாரிகளின் தொல்லைகள் அதிகம் ஏற்படுவதற்கில்லை. சக உத்தியோகத்தர் ஒத்துழைப்பு நல்குவர்.

விவசாயிகட்கு சனி ஜன்மராசியில் கடின உழைப்பைக் கொடுத்து மனநிம்மதியை வழங்குவார். தானிய விதைப்புகளுக்கு சாத்தியமான சூழ்நிலை உண்டு. வாக்கு கலகங்களால் கிடைக்க விருந்த சலுகைகளை இழக்க நேரும்.

தொழிலாளர்கட்கு கடின உழைப்பால் மனவேதனை அதிகமாகும். செய்தொழில் மாற்றங்களுக்கு காலம் சாதகமாக இல்லை. முதலாளிகளுடன் சுமுக உறவு நிலவும். அரச ஒப்பந்தங்கள் சுமாராக இயங்கும்.

மாணவர்கட்கு கல்வித் தகைமைகள் அதிகம் கிடைப்பதற்கில்லை. உற்சாகத்துடன் உழைத்தாலும் மனநிறைவு காணமுடியாது. கலைத்துறையில் முன்னின்று உழைக்க சந்தர்ப்பங்கள் கிடைக்கும். வெளிநாட்டுக்கல்வியிலும் முன்னேற்றமில்லை.

பெண்களுக்கு காதலர்களை வலுக்கட்டாயமாகத் தேடவேண்டிய வகையில் உணர்ச்சிகள் மேலோங்கும். வாக்கு வாதங்களால் குடும்பத்தில் பிணக்குகள் தோன்றும். கணவனின் முறைகேடான நடவடிக்கைகளால் குடும்ப மரியாதை குறையும்.

அதிஷ்ட நாட்கள்! மார்ச் 15 பி.ப, 16, 17மு.ப. 31, ஏப் 1,2 மு.ப. 11 பி.ப. 12.
துரதிஷ்ட ,, மார்ச் 17,பி.ப,18, 19 மு.ப. ஏப் 5, 6, 7 மு.ப.



## விருச்சிகம்

விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை.

இவர்களுக்கு கடந்த சில மாதங்களாக அனுபவித்து வரும் கஷ்ட காலத்திற்கு இம்மாதம் ஓர் விடிவுகாலம் என்றே சொல்ல வேண்டும். ஏழரைச் சனி முதற்கட்டத்தால் வேதனைப்படும் உங்களுக்கு தனஸ்தானத்தில் வியாழன் பணவருவாயைக் கூட்ட உதவி செய்யும். 4-ல் சுக்கிரன் வாகனாதி சுகங்கள் கிடைப்பதற்கு உதவும். வாக்கு வசீகரத்தால் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். எனினும் நீங்கள் படும் அலைச்சலுக்கு குறைவிராது. 10-ம் அதிபதி சூரியன் 5ம் இடத்தில் நற்சஞ்சாரம் செய்வதால் எண்ணிய கருமங்கள் எளிதில் நிறைவேறும். அரச ஸ்தாபனங்களால் லாபங்கள் கிடைக்க வழியுண்டு.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப ஸ்தானத்தில் வியாழன் இல்லற வாழ்வில் எல்லாவித தருமமும் சிறந்தோங்க வழிகாட்டுவார். கடன் தொல்லைகள் குறையும். குடும்ப கௌரவம் உயர்ச்சியடைய காலம் உகந்ததாகவுள்ளது. களத்திர சுகம், புத்திர சுகம், முன்னேற்றம் திருப்தியளிக்கும்.

வியாபாரிகட்கு செவ்வாய் 2-ல் இருப்பதால் வர்த்தக ரீதியாக பாதிப்பெதுவும் ஏற்படுவதற்கில்லை. வங்கி உதவிகளுடன் முதலீடுகளை மேற்கொள்ளலாம். அழகுசாதனப் பொருட்கள் வெளிவிவகார வியாபாரங்கள் லாபகரமாக இயங்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் திரிகோண ராசியில் பவனி வருவதால் எவ்வித பயமும் இல்லை. அந்தஸ்து உயர்வு, சம்பளப் பாக்கி கிடைத்தல் போன்றவற்றிற்கு இம்மாதம் சாதகமாக இருக்கும். உங்கள் எண்ணக் கிடக்கைகள் நிறைவேறும்.

விவசாயிகட்கு கமச்செய்கையில் அதிக லாபம் கிடைக்கச் சனீஸ்வரன் விடமாட்டார். எனினும் பணத்தட்டுப்பாடு ஓரளவு நீங்கும். பயிர் நாட்டல், விதைப்பு என்பவற்றில் அவதானமாக இருக்க வேண்டும்.

தொழிலாளர்கட்கு சனி அலைச்சலையும், சலிப்பையும் கொடுக்க முனையும். படும் கஷ்டத்திற்கு ஏற்ற லாபம் கிடைக்கும். புதுத் தொழில் ஒப்பந்தங்கள் செய்வதில் சிறிது காலதாமதம் ஏற்படும். முதலாளிகளுடன் உறவு சுமாராகவிருக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் முயற்சிக்கேற்ப பெறுபேறுகள் கிடைக்கும். கலைத்துறையாலும் விளையாட்டுத்துறையாலும் வெற்றியுண்டு. பொருளாதாரத் துறையில் உதவிகள் கிட்டும். வேலைவாய்ப்புகள் கிடைக்கும் சந்தர்ப்பமுண்டு.

பெண்களுக்கு அமைதியான வாழ்வு நடைபெறும். கணவனின் அன்பும் ஆதரவும் உண்டு. ஜன்மராசிச் செவ்வாயால் முற்கோபம் அதிகமாகும். காதல் விவகாரங்களில் சாதகமான பலன் உண்டு. மனதிற்கேற்ற மணவாளன் கிடைப்பான்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 17 பி. ப, 18, 19 மு.ப ஏப் 2 பி. ப, 3, 4.
துரதிஷ்ட நாட்கள்! மார்ச் 19 பி.ப, 20, 21 மு.ப, ஏப் 7 பி. ப, 8, 9 மு.ப.



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுரா்சிக்காரருக்கு சூரியன் 4-ல் லோக மூர்த்தியாக வலம் வந்து கொண்டிருப்பதால் கடந்த மாதத்தைவிட கஷ்ட பலன்கள் அதிகரிக்கும். 11-ல் சனி சினேகிதர் மூலம் பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்தும். 6-ல் ராகு அடிக்கடி சருமரோகங்களைக் கொடுக்கும். 3-ல் சுக்கிரன் இனசன ஒற்றுமைக்கு நன்ருயினும் வேறு துறைகளில் நஷ்டத்தைத்தரும். 4-ல் சூரியன் மாதுரு, பிதாவழி பலவெறுப்புகளைக் கொடுக்கும். 12-ல் செவ்வாய் சயன சுகக் குறைவைக் கொடுத்த வண்ணமிருக்கும். ஜன்மராசி வியாழன் பலவித கரைச்சல்களையும் சமாளிக்க உதவிபுரிவார்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சனி உச்சமடைவதால் பணமுடை ஏற்படாது. இல்லற தர்மம் சுமாராக இருக்கும். கணவன் மனைவி பிரிவினைகள் தோன்றிமறையும். சொத்து, பொருள் பண்டங்கள்யாவும் கவனமாகப் பாதுகாக்கப்படவேண்டும்.

வியாபாரிகட்கு வங்கி உதவிகளுக்கு குறைவிராது. முதலீடுகளில் லபாபம் கிடைப்பதரிது; பொருட்கள் தேங்கிக் கிடக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் தடைப்படும். கூட்டுறவு பங்குவியாபாரம் பாதிப்புறும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியனின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் நற்பலன் எதுவும் கிடைப்பதற்கில்லை. தொடுத்த கருமங்கள் வேதனையைத் தரும். கீழ் உத்தியோகத்தர்களால் தொல்லைகள் உருவாகும்.

விவசாயிகட்கு சனி 11-ல் பயிர்ச்செய்கையில் லாபத்தைக் கொடுக்கும். அறுவடையில் லாபத்தை எதிர்பார்க்கலாம். இயற்கையழிவுகள் தொல்லைப்படுத்தினும், நிலைமை சீராகும்.

தொழிலாளர்கட்கு சனி பகவான் லாபஸ்தானத்தில் உச்சமடைவதால் நற்பலன்களை எதிர்பார்க்கலாம். கூட்டுறவில் ஒற்றுமை மேலும் வலுப்பெறும். சகதொழிலாளர் மேல் இருந்த வெறுப்பு நீங்கும்.

மாணவர்கட்கு உள்ளூர்கல்வியில் நற்பலன் எதுவும் கிடையாது. தபால்கல்வி பயில்வோருக்கு ஓரளவு நன்று. சட்டக்கல்வி, சமூகசேவைத் துறைக்கல்வி பயில்வோர் பரீட்சைகளில் சாதகமான முடிவை எதிர்பார்க்கலாம். வேலைவாய்ப்புகள் கிடைப்பதரிது.

பெண்களுக்கு காதல் லீலைகளில் சந்தோஷம் இல்லை' தொடர்ந்தும் வேதனைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும்' குடும்பஸ்தர்கள் பெரும் தொல்லைகளுக்காளாவார்கள். வேலை பார்ப்போரும் நற்பலன்களை எதிர்பார்க்கமுடியாது.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 19 பி.ப.20,21மு.ப.
ஏப் 5, 6, 7 மு.ப.

துரதிஷ்ட ,, மார்ச் 14, 15 மு. ப.,
21 பி.ப., 22, 23 மு.ப. 9 பி.ப.,
10, 11 மு.ப.



## மகரம்

உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1, 2.

இவர்களுக்குச் சூரியன் 3-ல் தாம்ர மூர்த்தியாக சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் கஷ்டங்கள் அதிகரிக்கவே செய்யும். 12ல் வியாழன் பண விரயங்களை ஏற்படுத்தும். 2ல் சுக்கிரன் வாக்கு வசீகரம் போன்றனவற்றிற்கு நன்று. 3-ல் சூரியன், புதன் இனசனங்கள் அயலவருடன் ஒட்டி உறவாட வைத்து மனக்கஷ்டங்களைக் கொடுக்கும். 5ல் ராகு முதலீடுகள், எண்ணங்கள் என்பனவற்றில் தடங்கல்களை உண்டுபண்ணும். 10ல் சனி உச்சமடைவதால் அந்தஸ்தில் உயர்வு ஏற்படும். சினேகிதர்களின் உறவுகள் முறிவடையலாம். வெளிநாட்டு விடயங்களில் அதிக லாபமில்லை.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சனி 10ல் உச்சமடைவதால் இல்லற வாழ்வில் பாதிப்பில்லை. சகோதர வழி உதவிகளுண்டு. பழைய பாக்கிகள் மேலும் வளரும். புத்திர சோகங்களும் வேதனைகளும் ஏற்படத்தான் செய்யும். களத்திர சுகம் இல்லை.

வியாபாரிகட்கு வியாபாரத்தில் எவ்வித முன்னேற்றத்தையும் காணமுடியாது. சுக்கிர சஞ்சா

ரம் அலங்காரப்பொருள் வியாபாரத்திற்கு நன்றெனினும் முதலீடுகளில் சிக்கல்கள் தோன்றும். வங்கி உதவிகளில்லை.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 3-ல் ஸ்தான பலமடைவது நன்றுயினும், கீர்த்தி, புகழ், மரியாதை என்பன கிடைப்பதற்கு இடமில்லை. எடுத்த கருமச் சிறப்பில்லை. நன் மாற்றங்கள் கிடையாது,

விவசாயிக்கு சனி 10-ல் உச்சமடைவதால் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். தானிய வகைகள் இலாபகரமான விளைவைத் தரும். பண்ணை வியாபாரமும் இலாபகரமாக இயங்கும்.

தொழிலாளர்கட்கு முயற்சியின்மேல் செய்தொழில் உயர்ச்சியடையும் சிநேகிதருடன் சண்டைகள் வலுப்பெறலாம். புத்திக்கூர்மை குறைவாகவிருக்கும். அரச ஒப்பந்தங்கள் சீராக இயங்கும்.

மாணவர்கட்கு கலைத்துறைக் கல்வியிலும் பார்க்க விஞ்ஞானத்துறைக் கல்விக்கு கிரகநிலைகள் சாதகமாகவுள்ளன. தபால் மூலம் கல்வி கற்போர், தொழில் முறைப் பயிற்சிக் கல்வியில் ஈடுபட்டோர் விசேட பலன்களையடைவர்.

பெண்களுக்கு விவாக முயற்சிகளுக்கு காலம் சாதகமாக இல்லை. காதல் விவகாரங்களும் சீராக இராது, வீண் ஆடம்பரச் செலவுகள் அதிகதிரிக்கும். வேலை பார்ப்போருக்கும் காலம் நன்றாக இல்லை. மாத பிற்பகுதியில் நிலைமை சீராகும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 21 பி.ப, 22, 23 மு.ப, ஏப் 7 பி.ப, 8, 9 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 15 பி.ப, 16, 17 மு.ப. 23 பி.ப, 24, 25, ஏப் 11 பி.ப, 12



## கும்பம்

அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1,2,3,

கும்பராசியைச் சேர்ந்தவர்கட்கு சூரியன் 2ல் சுவர்ணமூர்த்தியாக இராஜபவனி வருவதையிட்டு மகிழ்ச்சியடையக்கூடிய காலம். தனகாரகன் வியாழன் லாபஸ்தானத்தில் பணவருவாய் பெருக காரணமாவான். 9-ல் சனி உச்சமடைவதால் பிதுர்வழி நன்மைகள் அதிகரிக்கும். ஜன்மராசியிலும், 2-ம் வீட்டிலும் சுக்கிரன் சஞ்சரிப்பதால் வாக்கு வசீகரம் அந்தஸ்து உயர்ச்சி என்பன கிடைக்க வழியுண்டாகும். 10ல் செவ்வாய் திக்பலம் பெறுவதால் தொழில் அந்தஸ்து உயர்வடையும். சிறு பயணங்களால் லாபங்கள் உண்டாகும். தேகாரோக்கியம் சீராக இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் சூரியனும் குடும்பாதிபன் வியாழனும் அமர்வதால் இல்வாழ்வில் நன்மைகள் அதிகரிக்கும். புத்திர முன்னேற்றங்களும் உதவிகளும் அதிகரிக்கும். களத்திரசுகம் தாராளமாகவுண்டு.

வியாபாரிகட்கு புதன் பெலமடைந்த சூரியனுடன் கூடியிருப்பதால் லாபகரமாக வியாபாரம் செய்யலாம், வங்கி உதவிகள் அதிகரிக்கும். அழகுசாதனப் பொருட்கள் அதிகம் விற்பனையாகும். கள்ள மார்க்கட்டில் லாபம் அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 2-ல் பலவிதத்திலும் வேண்டிய உதவிகளை வழங்கும். நன்மாற்றங்களும், உயர்ச்சிகளும் ஏற்படலாகும். சினேகிதர் உதவிகளுண்டு. அத்துடன் பணச்செலவுகளும் ஏற்படும்.

விவசாயிகட்கு சனி 6ல் உச்சமடைவதால் அறுவடையில் நல்ல லாபமுண்டாகும். காணி பூமி சேர்க்கைக்கு காலம் சாதகமாக உள்ளது. அரசியல் தொல்லைகள் குறைவடையும். பழைய பாக்கிகள் வசூலாகும்.


தொழிலாளர்கட்கு தொல்லைகள் அதிகமில்லை. முதலாளிகளுடன் உடன்படிக்கைகள் வெற்றியை அளிக்கும். சொந்தத் தொழில் செய்ய விரும்புவோருக்கு 10ல் திக்பலம் பெற்ற செவ்வாய் உதவும். அரச ஒப்பந்தங்கள் சாதகமாக அமையும்.

மாணவர்கட்கு சித்தி கிடைப்பதற்கு ஏற்ற கிரகநிலைகளுள்ளன. கல்லூரியில் ஏற்பட்ட குழப்பநிலை சீர்திருத்தமடையும். வெளிநாட்டுக் கல்வி வெற்றியளிக்கும். பிறமொழிக் கல்வி கற்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

பெண்களுக்கு நற்காரியங்களை எதிர்பார்ப்பவர்கள் திருப்தியடைய வழியுண்டு. காதல் கல்யாணங்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படலாம். கணவன் மனைவி உறவு மனமகிழ்வைத் தரும். நண்பர்கள், பெரியோர்கள் உதவி கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 14, 15 மு.ப,23 பி.ப, 24, 25, ஏப் 9 பி.ப, 10, 11 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 17 பி.ப, 18, 19 மு ப, 26, 27, 28 மு.ப.



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியினர்க்குச் சூரியன் ஜன்மராசியில் இரஜத மூர்த்தியாக சஞ்சாரம் செய்வதால் நன்மை தீமை கலந்த பலன்களே காணப்படும். அட்டமத்துச்சனியின் வேதனையால் துன்பப்படும் வேளையில் சிலவகையில் மனத்திருப்தியுமுண்டாகும். 10-ல் வியாழன் வீடு வாசல் தொழில் மாற்றங்கள் முதலியன ஏற்பட வழிவகுக்கும். 9-ல் செவ்வாய் பிதுர்வழியால் தொல்லைகள் உருவாக்கும். ஆரோக்கியம் சுமாராகவிருக்கும். இனத்தவர் மூலம் நன்மைகளை எதிர்பார்ப்பதற்கில்லை. பணப்புழக்கத்தில் சிறிது முன்னேற்றம் தென்படும். வெளியிடத் தொடர்புகளில் தீர்க்கமான ஓர்முடிவு எடுக்கமுடியாது திண்டாடுவீர்கள்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் செவ்வாய் 9-ல் முதியோரால் இல்வாழ்வில் தொல்லைகளைக் கொடுப்பான். வியாழனுல் புத்திரசுகமும் முன்னேற்றமும் ஏற்படலாகும். கடன் தொல்லைகள் இருக்கும். களத்திர சுகமிராது.

வியாபாரிகட்கு புதன் 1, 2-ம் இராசிகளில் வியாபார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். வங்கி உதவிகளும் உண்டு. மாத பிற்பகுதியில் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை அதிகமாகும். பங்குவியாபாரம் சுமாராக இயங்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் கஷ்டங்கள் அதிகமிராது. மேலதிகாரிகளின் முற்கோபத்துக்கு ஆளாகினும் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம். இடமாற்றங்கள் பதவியுயர்வுகளை எதிர்பார்க்கவேண்டாம்.

விவசாயிகட்கு அட்டமத்துச்சனியால் தீய பலன்களையே அனுபவிக்க வேண்டியிருக்கும். ஏனைய கிரகங்களின் சஞ்சாரம் கஷ்டத்தை அதிகரிக்கவிடாது. பண்ணை விவசாயிகள் மிக்வும் பாதிக்கப்படுவர்.

தொழிலாளர்கட்கு முதலாளிவர்க்கத்துடன் தொடர்ந்தும் மோதல்கள் ஏற்படும். சொந்தத் தொழில் செய்வோர் சிறு முன்னேற்றங்களை காண்பர். கூட்டுறவுத்துறையில் மேலும் சிக்கல்கள் அதிகமாகும்.

மாணவர்கட்கு கல்வியில் பெரும் முன்னேற்றங்களை எதிர்பார்க்கவியலாது. கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர் மனமகிழ்வுறுவர். வெளிநாட்டுக் கல்வி பயில்வோரின் முயற்சிகள் திருப்திகரமாக இராது. மாதபிற்பகுதி நேர்முகப்பரீட்சைகளில் தோற்ற விசேடமானது.

பெண்களுக்கு சுக்கிரன் 12-ம், 1-ம் இடங்களில் காதல் எண்ணங்களைத் தூண்டிவிடும். கன்னிப் பெண்கள் அலங்கார வகைகளில் பணத்தை விரயமாக்குவர். விவாக முயற்சிகள் எளிதில் கைகூடுவது கடினம். வேலைவிடயங்கள் ஓர் முடிவைத் தரமாட்டாது.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 15 பி.ப, 16, 17, மு.ப. 26,27,28, மு.ப. ஏப் 11 பி.ப. 12.

துரதிஷ்ட ,, மார்ச் 19 பி, ப., 20, 27 மு.ப, 28 பி.ப, 29, 30.

---


வர்த்தக ஸ்தாபனங்களின்
விற்பனையைப் பெருக்கிடும்
விளம்பர சேவை

**மணிக்குரல்**
★ **விளம்பர சேவை**
பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

அறிவிப்பாளர்:
மேஜர் ஷண்


---

# திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன

★ பவானி ★

கோயிலுக்குப் போகிறவன் ஒரு கோரிக்கைக் காகவே போகிறுன். வைத்தியனிடம் செல்பவன் ஒரு வியாதி நிவாரணத்திற்காகவே செல்கிறுன். கடைக்குப் போகிறவன் ஒரு பொருளுக்காகச் செல்கின்றுன். சோதிடனிடம் செல்பவன் ஒரு மனத் தெளிவுக்காகச் செல்கின்றுன். இதனுல் மனிதனின் அசைவும், ஆட்டமும் ஏதாவதொரு தேவையைக் குறிக்கின்றன.

ஆரம்பத்திலிருந்து அவதானியுங்கள். பிறந்த பிள்ளை பாலுக்கு அழுகின்றது; வளரும்போது படிப்பிற்கு அழுகின்றது; பருவம் வந்ததும் திரு மணத்திற்கு அழுகின்றது; பிள்ளை பிறந்ததும் தாய் காப்பாற்ற அழுகின்றுள். கல்லறைக்குச் செல்லும்வரை ஏதாவது ஒரு தேவை ஆசையின் பெயரில் தொடர்கின்றது. ஆசைகள் பேராசை களாக மாறும்போதுதான் அனர்த்தங்கள் வருகின் றன. அப்போது கோலம் காட்டிய கூடு விழுந்து விட்டால் கட்டிய கோட்டையோ, காதற்ற ஊசியோ கூட வராது. ஆசைகளே பல விடயங் களுக்கு மூலமாக அமைந்து விடுகின்றன. அப் படியான ஆசைகள் நிறைவேறுமா...? அல்லது நிறைவேருதா? என்பதை முன்கூட்டிச் சொல் வதுதான் சோதிடம்.

| | | | |
|---|---|---|---|
| I 26 54<br>சனி 20 41 | யுரே 23 39<br>கே 25 46<br>II 28 23 | III 26 22 | IV 23 05 |
| XII 22 50 | 21-10-1938<br>ஜனன நேரம்<br>மாலை 5-18-34 மணி | | V 21 17 |
| குரு 29 30<br>XI 21 17 | [6° வ. 56' 79° கி.56']<br>அயனும்சம் 22° 54' | | VI 22 50<br>நெப் 29 18 |
| X 23 05 | IX 26 22<br>சுக் 10 28 | VIII 28 23<br>ரா 25 46<br>புத 11 54<br>சூரி 4 31 | VII 26 54<br>செவ் 4 44<br>சந் 11 09 |

| பாவமுனைகளும் கிரகங்களும் | நட்சத்திர அதிபதி | உபநட்சத்திர அதிபதி |
|---|---|---|
| 1ம் பாவமுனை | புதன் | குரு |
| 3ம் பாவமுனை | செவ்வாய் | குரு |
| 6ம் பாவமுனை | சுக்கிரன் | சனி |
| †7ம் பாவமுனை | செவ்வாய் | குரு |
| †8ம் பாவமுனை | குரு | சுக்கிரன் |
| 10ம் பாவமுனை | சுக்கிரன் | சனி |
| 11ம் பாவமுனை | சந்திரன் | சனி |
| சூரியன் | செவ்வாய் | சுக்கிரன் |
| சந்திரன் | சந்திரன் | செவ்வாய் |
| †செவ்வாய் | சூரியன் | சனி |
| புதன் | இராகு | சனி |
| குரு | செவ்வாய் | சனி |
| †சுக்கிரன் | சனி | சூரியன் |
| சனி | புதன் | கேது |
| இராகு | குரு | புதன் |
| கேது | சுக்கிரன் | புதன் |
| யுறேனஸ் | சுக்கிரன் | சனி |
| நெப்ரியூன் | சூரியன் | இராகு |

11ம் வீட்டில் குரு நின்றுல் இலாபம், சுப காரியங்கள், ஆசைகள், கர்மங்கள் நன்கு அமை யும் என்பார்கள்.

குரு லக்கினுதிபதி மட்டுமல்ல; கர்மாதிபதி யாகி 11ல் நிற்கிறுன். உதயலக்கினமுனை நின்ற உபநட்சத்திராதிபதியும் குருவாகும். இதனுல் கர்மம் சிந்தனை யாவும் ஒத்துழைக்கின்றன.

எட்டு வருடங்களுக்கு முன் சாதகியும், தாயா ரும் எனது நண்பரும் என்னைக் காண வந்தார்கள். முன்பு கூறியபடி ஒரு தெளிவுக்காக என்னிடம் வந்தார்கள். அன்று சாதகியிடம் ஆடம்பரமும் அட்டகாசமும் ஆட்சி செலுத்தின. 2ம் வீட்டுச் செவ்வாய் 5ம் வீட்டுச் சந்திரனுடன் சேர்ந்து இலக்கினத்தைப் பார்க்கிறுன். இதனுல் தனம், செல்வம், சௌபாக்கியம், வாக்குச் சாதுரியம், சிந்தனை, புத்தி யாவும் சாதகிக்கு துணிவையும், அட்டகாசத்தையும் கொடுத்துவிட்டன. இதே செவ்வாய் சுக்கிரனின் பலனைக் கொடுப்பதால் நகைகளும், பகட்டும், ஆடம்பரமும் சாதகியில்

ஆட்சி செலுத்தின. பணத்தினல் எதையும் சாதித்துவிடலாம் என்ற ஆசையும், ஆணவமும் தலைதூக்கி நிற்பதை உணர்ந்தேன்.

செவ்வாய் 9-ம் வீட்டதிபதி. இது பூர்வ புண்ணியம், தந்தை முதலியவைகளைக் குறிக்கும். அதனுல் அவளின் ஆடம்பரமும் அட்டகாசமும் தந்தை வகுத்த வழியோ அல்லது பூர்வ புண்ணியமோ யான் அறியேன். அதுவே சாதகிக்கு தோஷமாகிவிட்டது. அதை தாயின் மூலமாகவே நான் ஒரு கட்டத்தில் அறிந்து கொண்டேன்.

சுருங்கக் கூறில் இவர்களின் போக்கு பிடிக்கவில்லை. அதனுல் அவர்களின் சாதகத்தை ஆராயவும் நான் விரும்பவில்லை, ஆனுல் நண்பருக்காக விரட்டவும் முடியவில்லை; மறுக்கவும் முடியவில்லை, சாதகியின் பிடிவாதத்தால் வாழ்க்கையே ஆடிப்போகுமா அல்லது நன்கு அமையுமா என்பதை அறிவதே முக்கிய நோக்கம். உதயலக்கினம் 26 பா. 54 க. மீனத்தில் அமைகிறது. இந்நிலை ஓவசியர். விடுதிச்சாலை நடத்துபவர்கள் முதலியோரைக் குறிக்கும். இதனுல் தான் என்னவோ இச்சாதகி கப்பல் போன்ற தனது மாளிகையின் ஒரு பகுதியை விடுதியாக மாற்றிவிட்டாள்.

7ம் வீட்டு முனையின் உபநட்சத்திராதிபதி குருவாகும். அவன் 11ம் வீட்டில் நிற்பதால் திருமணத்திற்கு உதவுவானு...? 2ம் வீட்டுச் செவ்வாயின் நட்சத்திரத்தில் குரு நிற்பதால் சொர்க்கத்தில் இவளின் திருமணம் நிச்சயமாகின்றதா என்ன? வசந்தங்கள் பல உருண்டோடி விட்டன. வாழ்க்கைதான் அமைந்ததா? ஆண்டவா! இது என்ன சோதனை...? பாவம், குரு நீசப்பட்டதால் கிடைக்கவில்லையென்று பரிதாபப்பட்டார்கள் சில சோதிடர்கள். சந்திரனைச் சனி பார்ப்பதால் திருமணம் தடைப்படுகிறது என்ருர்கள் சில நவீன சோதிடர்கள். தடைப்பட்ட திருமணத்திற்கு எப்போது தடை நீங்கும் என்று அவர்கள் கூறவில்லை. 7ல் செவ்வாய் இருப்பதால் பொல்லாத தோஷம் உண்டு. அதனுல்தான் திருமணம் கைகூடவில்லையென வேறு சில சோதிடர்கள் கூறினுர்கள். இப்படியான பலன்களைக் கேட்டு வரன் தேடித்திரிந்த தாய் ஆடிப்போய் விட்டாள். சாதகியோ யாராவது டாக்டரை அல்லது எஞ்ஜினியரைத்தான் கட்டுவேன் என்று அடம் பிடித்தாள். அவள் பேச்சு வீட்டையும் வீதியையும் பரபரப்பாக்கியது.

11ம், 12ம் வீட்டதிபதியாகிய சனி 12-ல் நிற்கிருன். இதனுல் லாபம் மறைதல் வேண்டும் அல்லது வங்கியில் போடல் வேண்டும். இன்பம் மறைதல் வேண்டும் அல்லது திருட்டுத்தனமாக இருத்தல் வேண்டும். சனியை செவ்வாயும், சந்திரனும் பார்க்கிருர்கள். இதனுல் துணிவும் சிந்தனையும் துணை போகின்றன. "7ம் வீட்டு முனையின் உபநட்சத்திராதிபதியாகிய குரு செவ்வாயின் நட்சத்திரத்தில் சனி உப நட்சத்திரத்தில் நிற்கிருன். செவ்வாயும் சனியும் அமைந்த வீடுகள் திருமணத்திற்கு பாதகமானவை. செவ்வாயும், சுக்கிரனும் ஒரே விதமான பலனைக் கொடுப்பார்கள். சுக்கிரனும் 8-ல் மறைந்து போனுன்...!" இப்படியாக ஆராய்ந்து கொண்டு இருந்தேன்.

அக்காலை வளையோசை கேட்டு விழிகளை உயர்த்தினேன். 'பத்ததி முறைகளைப் பின்பற்றுபவர்கள் சிலரைச் சந்தித்தோம், அதே வேளையில் இராமன் முறைகளிலும் ஈடுபட்டுள்ள பலரையும் அணுகினேம். அவர்கள் கூறியது எதுவும் சரிவரவில்லை. எல்லோரும் ஏமாற்றுக்காரர்கள். சோதிடமே பொய்தான்", என்றெல்லாம் பொரிந்து தள்ளினுர் சாதகி.

எனக்கு எரிச்சலாக இருந்தது; "7-ம் வீடு சோதிடர், பங்காளிகள், வாழ்க்கைத் துணைவர் முதலியோர்களைக் குறிக்கும். 7-ம் வீட்டு முனை நின்ற உபநட்சத்திராதிபதி குருவாகும், இப்பொழுது உங்களுக்கு குருதசை நடைபெறுகிறது. குரு பன்மையைக் குறிக்கும். அதனுல் அவன் காலத்தில் பல தடவை முயற்சிக்க வேண்டும்; பலரைச் சந்திக்கவும் வேண்டும். குரு என்னுடைய ஆளுங் கிரகம். அதனுல் இன்று பலருடன் என்னைச் சந்திக்கிறீர்கள். எடுத்த எடுப்பிலேயே வெற்றி கண்டால் பல தடவை முயற்சிகள் ஏன்? பலரைச் சந்திக்க வேண்டும் என்பது உங்கள் தலைவிதியாச்சே! சாந்தியில்லாத உள்ளத்தால் எதையும் சரியாகப் புரிந்துகொள்ள முடிகிறதா?" என்றேன்.

நல்லதைச் செய்ய வேண்டும், நல்லதைப் பேசவேண்டும் என்பதற்குத்தான் எத்தனை சோதனை?

நண்பனின் பார்வையால் நான் தணிந்து போய் விட்டேன்.

அதே வேளையில் சாதகியின் தாயார், "தம்பி, கொழும்பிலும் பெரிய வீடு இருக்கிறது. பொருள்

பண்டம் யாவும் இருக்கிறது. செவ்வாய் தோஷம் என்று இச்சாதகத்தை தள்ளி விடுகிறார்கள். இவளை வைத்து காப்பாற்ற ஒரு நல்ல மாப்பிள்ளை வேண்டும். கிடைக்குமா? எப்போது? சொல்லு தம்பி?..." என்றெல்லாம் வேண்டிக் கொண்டாள். தாயின் பிரார்த்தனை ஆசை நியாயமாகப் பட்டது.

இலக்கினாதிபதியாகிய குரு கர்மாதிபதியாகி 11ல் நிற்கிறான். 6ம் வீட்டில் நிற்கும், 2ம், 9ம் அதிபதியாகிய செவ்வாயின் நட்சத்திரத்தில் குரு நிற்கிறான். அதனால் குரு 10ம், 1ம், 11ம் வீடுகள் குறிக்கும் நபர்கள் அல்லது விடயங்கள் மூலம் 2ம், 6ம், 9ம் வீடுகளின் பலன்களை கொடுப்பான்.

இப்பலன்கள் நன்மையாக அமையுமா, அல்லது தீமையாக அமையுமா? குரு நின்ற உப நட்சத்திராதிபதிதான் அதைத் தீர்மானிக்க வேண்டும். சனி உபநட்சத்திரத்தில் குரு நிற்கிறான். சனி 12ல் நிற்கிறான், இது திருமணத்திற்கு நல்லதல்ல. நாட்டுச் சோதிடரின்படி சனி உதயலக்கினத்தில் இருக்கின்றான். அப்படியானால் அது திருமணத்திற்கு நல்லதாகும். திருமணமும் நடைபெறல் வேண்டும். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? இதனால் தான் பத்ததி முறை சிறப்படைகிறது. நாம் கையாளும் சோதிட முறைகள், சரியானதும் பூரணத்துவமும் உள்ளதாயிருந்தால்தான் சோதிடப் பலன்களில் உறுதியும் நம்பிக்கையும் உண்டாகும்.

சாதகிக்கு குருதசை 8-12-1972ல் ஆரம்பமாகியது. இச்சாதகிக்கு குரு 2ம், 6ம், 9ம், 11ம், 12ம் வீடுகளின் பலன்களைக் கொடுத்தபோதிலும் 6ம், 12ம் வீடுகளின் பலன்கள்தான் மேலோங்கி நிற்கின்றன, அதே வேளையில் 8-ம் வீட்டிலுள்ள சுக்கிரனும் 6ம் வீட்டில் நிற்கும் செவ்வாயும் ஒரே விதமான பலனைக் கொடுக்கிறார்கள். "குரு 6ம், 8ம், 12ம் வீடுகளின் பலனைக் கொடுக்கின்றன. இவை கல்யாணத்திற்கு உதவாது வங்கியில் பணம் போடுவதற்குத்தான் உதவும்" என்றேன். தெளிவைத் தேடிவந்த தாயுள்ளம் பந்த பாசத்தினால் குழம்பிப்போய் இருந்தது.

இனி 6ம், 10ம் பாவமுனைகளை ஆராய்வோம். அவை இரண்டும் சுக்கிரனுக்குரிய நட்சத்திரத்தில் சனி உப நட்சத்திரத்தில் நிற்கிறார்கள். ஸ்புட அமைப்பினால் செவ்வாயும் சுக்கிரனும் ஒரே விதமான பலன்களைக் கொடுப்பார்கள் என்று முன்பு கூறியிருந்தேன். இதனால் 6-ம், 10-ம் பாவமுனைகள் செவ்வாய் நட்சத்திரம் சனி உபநட்சத்திரத்தில் நிற்பதாகக் கருதலாம். ஆனால் குரு, செவ்வாய் நட்சத்திரம் சனி உபநட்சத்திரத்தில் நிற்பதால் 6ம், 10ம் முனைகளில் அவன் ஆதிக்கம் செலுத்துகின்றான். இதனால் இவ்வீட்டின் பலன்கள் மேலோங்கி நிற்கின்றன. 2ம், 7ம், 11ம் வீடுகளின் பலன்கள் திருமணத்தைக் கொடுக்குமானால் இவைகளுக்கு விரயஸ்தானமாகிய 6ம், 10ம் வீடுகளின் பலன்களால் கல்யாண பந்தம் கலைந்து போய் விடும்.

"தம்பி, எல்லாச் சோதிடர்களும் ஏதாவது காரணங்களைக் கூறித் தாங்கள் சொல்வதுதான் சரியென நம்ப வைக்கிறார்கள். குறை விளங்க வேண்டாம், உங்கள் தீர்ப்பை, தீர்க்கமாக-திட்டவட்டமாக நான் விளங்கும் விதத்தில் கூற முடியுமா?" எனத் தாயுள்ளம் தவித்தது.

"காலம்தான் உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். எப்படி விளக்கமாகச் சொல்வதென்று தெரியவில்லையே!" ஆசை மனசு என்முகத்தையே ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தது. "அம்மா! உங்கள் வீதியோரமாக பெரிய தண்ணீர்க்குழாய் புதைக்கிறார்கள். அக்குழாயிலிருந்து சிறு குழாய்கள் மூலம் ஒவ்வொரு வீட்டுக்கும் நீர் வழங்குவார்கள். குழாயில் தண்ணீர் இருந்தால் வடிமுனையைத் (Tap) திறக்கும்போது தண்ணீர் கொட்டுகின்றது. குழாயில் தண்ணீர் இல்லையேல் வடிமுனையைத் திறந்தாலும் தண்ணீர் வருவதில்லை. பெரும் குழாயில் தண்ணீர் இருந்தும் அழுக்குகளும் கறையும் படிந்தபடியால் சிறிய குழாயில் தண்ணீர் வராவிட்டால் அல்லது கறை கட்டிய படியால் வடிமுனையே திறக்க முடியாது போனால் தண்ணீர் கிடைக்குமா? குழாயில் தண்ணீர் இருந்தும் அதை அனுபவிக்க முடியவில்லையே! இதைப் போன்றுதான் உங்கள் மகளின் திருமணமும். அதுதான் விதியின் விளையாட்டு!"

அமைதி நிலவியது. இரு பெண்களும் கண்ணீரிலே கண்களை மிதக்க விட்டார்கள். கடலில் தோன்றிய அலைகள் கரையில்தான் அழிகின்றன. இதயத்தில் தோன்றிய ஆசை அலைகள் எங்குதான் அழியப்போகின்றன? சமீபத்தில் நடந்த ஆடிக் கலவரத்தின்போது கப்பல் மூலம் வந்திருந்தார்கள். தாய் நோய்வாய்ப் பட்டிருந்தார். சாதகிக்கு கல்யாணம் நடைபெறவில்லை. கவலைகள் நரையிட்டுக் காட்டின. ஆடம்பரமும் அலங்காரமும் எவ்வளவோ மறைந்துவிட்டன.

# சலரோகம்

சலரோகம் சௌக்கிய விதிகளின்படி நோக்கின் எமது சீரண உறுப்புக்கள் செவ்வனே செயல்படாமையாலேயே உண்டாகின்றது. இது உலகில் பெரும்பான்மையோருக்கு உண்டு. ஈரலுக்கு பக்கத்தில் உள்ள பன்கறியாஸ் சுரப்பியில் உள்ள அணுக்கள் தாக்கப்படுதலே காரணம். எதிர்பாராத பெரும் அதிர்ச்சியாலும் இவ்வணுக்கள் சேதமடையும்.

நாம் உண்ணும் உணவு பற்களால் நெரித்து உமிழ்நீர்களில் கலந்து அரைக்கப்பட்டு வயிற்றுக்கு போகிறது. அங்கு (Hydro Cloric acid) கைட்ரோகுளோறிக் அமிலம் போன்றவற்றுடன் சேர்ந்து சீரணிப்பதற்காக குடலில் செல்கிறது. சிறுகுடல் தொடங்குமிடத்தில் ஈரலுக்கு பக்கத்தில் உள்ள பன்கிறியாஸ் சுரப்பியில் இருந்து உற்பத்தியாகும் இன்சுலின் சாற்றுடன் சேரும் பொழுது உடல் வளர்ச்சிக்குரிய சீனித்தன்மை சிறுகுடலில் உறிஞ்சப்படுகிறது.

இந்த பன்கிறியாஸ் என்னும் சுரப்பி தாக்கப்பட்டால் இதிலிருந்து உற்பத்தியாகும் இன்சுலின் திரவம் குறைந்துவிடும். இதன்விளைவாக உடல் வளர்ச்சிக்குரிய சீனித்தன்மை தேகத்தில் சேராமல் இரத்தத்துடன் கலந்து (Kidney) கிட்னியில் சிறு நீராக்கப்பட்டு சீனிப் பொருளுடன் சிறுநீராக வெளியேறுகிறது. ஆகவே பன்கிறியாஸ் சுரப்பி அளவுக்கு மிஞ்சி செயல்படுவதற்கு காரணம் • நாம் அதற்கு அளவுக்கு மிஞ்சிய வேலைகளைக் கொடுக்கிறோம். அதனால் அதுசீக்கிரம் பழுதடையலாம். உதாரணம் - நாம் காலையில் எழுந்தவுடன் (Bed Coffee) பால்காப்பி சாப்பிடுகிறோம். அதில்சீனிச்சத்து. அது போனவுடன் சுரப்பி வேலை தொடங்கும். பின்பு 8 மணிக்கு காலைப்போசனம் மா, சீனி, சத்துகள். பின் 10 மணிக்கு தேநீர் அதிலும் சீனி பின் மதிய போசனம் அதிலும் மாச்சத்துக்கள். பின் 3½ மணிக்கு தேநீர் அதிலும் சீனி. பின் 5 மணிக்கு சிநேகர் உறவினர் வீட்டில் சிற்றுண்டி தேநீர் அதிலும் சீனி. பின் இரவு பலகாரம் கோப்பி சீனிமாசத்து ஆகவே எத்தனை தரம் ஒரு நாளைக்கு இச் சுரப்பிக்கு வேலை கொடுக்கிறோம். இவற்றை சகிக்காமல்தான் இச்சுரப்பி வேலை நிறுத்தம் செய்கிறது.

ஆறு அறிவுள்ள மனிதனே தன்து சௌக்கியத்தை பேணாமல் கெடுத்து விடுகிறான். ஐந்து அறிவுள்ள விலங்குகளைப் பாருங்கள், மனிதனின் மூதாதையான குரங்கைப் பாருங்கள் தனக்கு கொடுத்த உண்பண்டங்களையெல்லாம் தங்குதடையின்றி வாயில் போட்டு மென்றுவிடும். அதனால் உணவுகள் அதன் இரண்டு தடைகளிலும் அடங்கி நிற்கும். அதனை உணவு நேரத்தில் மாத்திரம் மீட்டு உண்ணும். ஆடு - மாடுகள் கூட அப்படித்தான் இவை மீட்டு காலாகாலத்தில் உண்ணும்,

**சோதிடர் எஸ். நடராசா, நல்லூர்.**

பன்கிறியாஸ் வேலை நிறுத்தம் செய்வதால் என்ன பலாபலன் உடல் வளர்ச்சிக்கு ஏற்படும். சீனிப் பொருள் பன்கிறியாஸ் சுரப்பியில் இருந்து உற்பத்தியாகும் இன்சுலின் இல்லாமல் மாற்றமடையாது. அச்சீனிப்பொருள் இரத்தத்துடன் சேர்ந்து (Kidney) கிட்னியில் போய் சல்லடையால் அரிக்கப்பட்டு சிறுநீருடன் சேர்ந்து சீனிச்சத்து வெளியேறும். இப்படி வெளியேறினால் மனிதன் நரம்பு பலவீனம் உற்று இருதய பலவீனம் அடைந்து சலரோகத்துக்கு ஆளாகிறான். சலரோகி சலம் விடப்பட்ட இடத்தில் எறும்பு மொய்ப்பதைப் பார்க்கலாம். அதிகம் தண்ணீர் தாகம் இருக்கும். ஆகவே இதற்கு முக்கிய காரணம் அடிக்கடி அளவுக்கு மிஞ்சி மா சீனிப் பொருட்கள் உண்பது. யோகி ஒரு நேரம் புசிப்பான். போகி இரண்டு நேரமும் புசிப்பான். ரோகி மூன்று நேரமும் புசிப்பான். ஆனால் அதிலும் கூடப்புசிப்பவர்களை என்னென்று சொல்வது. தனக்கு தான் துரோகி என்றே கூற வேண்டும்.

சலரோகம் பாதிக்கப்பட்டால் நரம்புகள் பாதிக்கப்படும். நரம்பு உணர்ச்சி குன்றி நெருப்பு சுட்டாலும், காலில் மண்வெட்டி கத்தி முதலிய ஆயுதங்களால் ஏற்படும் காயங்களும் விரைவில் மாறாது. கண்பார்வை குன்றும். இதன் விளைவாகச் சிலருக்கு கண்பார்வை மறையவும் கூடும்.

## சோதிடம்:

சோதிட ரீதியாக சலரோகத்தை குறிக்கும் இராசி கன்னி, கன்னிராசி கெட்டால், இந்நோய் வரக்கூடும். வியாழன், வெள்ளி, சந்திரன், ராகு, செவ்வாய் முதலிய கிரகங்கள் நீசமாகியோ, தீய கோள்களுடன் சேர்ந்தோ 6,8,12-ல் நிற்பதாலும் சலரோகம் வருவதற்கு காரணங்களாக அமைகின்றது. எனினும் சிறப்பாக வியாழன் கெட்டுப்போய் மேற்கூறியதீய கோள்களுடன் அமைவதால் சிலருக்கு முதலில் சலரோகமும் 5, 10 வருடங்கள் செல்ல ஈரலில் புண்ணும் (Cirro--hosis of the Liver) ஏற்படுகிறது.

சலரோகம் கீழ்காணும் கிரகசேர்க்கையால் உண்டாகின்றது.

1. வியாழன் நீசனுகியோ அல்லது 6, 8, 12-லோ நிற்றல்.
2. 12-ல் இருக்கும் வியாழனுல் ஆறில் இருக்கும் வெள்ளியைப்பார்த்தல்.
3. ஐந்தாதிபதி 6, 8, 12 அதிபதிகளுடன் சேர்ந்திருத்தல்.
4. ஆருதிபதி 12 லும் பன்னிரண்டாதிபதி ஆறிலும் மாறியிருத்தல்.
5. வியாழன், சனி, ராகுவுடன் சேர்ந்தோ அல்லது சனி ராகுவால் பார்க்கப்பட்டோ இருத்தல்.
6. ராகுவினுல் பார்க்கப்பட்ட வியாழன் மறைவுஸ்தானங்களில் நிற்றல்.
7. சனியும் வியாழனும் சேர்ந்தோ பார்த்தோ இருத்தல்.

**முக்கியகுறிப்பு:**

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

## உதாரண சாதகங்கள்

| | | | |
|---|---|---|---|
| கே | சனி வி | | வெ |
| | | | புத |
| சந் | | | சூ செ |
| | | ல | ராகு |

பிறப்பு 16-8-40
காலை 11-30
சந்திரதசை 5 வருடம் இருப்பு.
இவர் ஓர் கடும் குடிகாரர் (Cirrohosis of the Iivcr) இவருக்கு 30 வயதில் பின் சலரோகமும் 39 வயதில் ஈரலில் புண்ணும் உண்டாகியது. இதில் ஐந்தாதிபதி சனியுடன் ஆருதிபதி வியாழன் சேரல்.

பிறப்பு 27-1-39
காலை 5 மணி
புதன் திசை வரு 5 மீ 3 நா 27
ஆருதிபதி பன்னிரண்டிலும், பன்னிரண்டாதிபதி செவ்வாய் நாலில் நிற்கும் வியாழனைப் பார்ப்பது.

| | | | |
|---|---|---|---|
| கே,சந் சனி | | | |
| வி | | | |
| சூ பு | | | |
| லக் | செ வெ | | ரா |

| | | | |
|---|---|---|---|
| கே பு | சூ,வெ லக் | | |
| | | | |
| | | | |
| சந் | செ | | சனி,வி ரா |

பிறப்பு 18-4-1922
காலை 7-02 மணி
வெள்ளிதிசை 7 வருடம் 6 மாதம்
வியாழன் சனி ராகு சேர்ந்து இருத்தல் ஆருதிபதியும் பன்னிரண்டாதிபதியும் மாறி இருத்தல் வியாழன் சனிராகு கன்னிராசி 6-ம் வீட்டில் நிற்றல்.

பிறப்பு 26-7-1976
காலை 4-23 மணி
வியாழதிசை இருப்பு வரு 10 - 3 - 3
வியாழன் பன்னிரண்டிலும் சந்திரன் வியாழ நட்சத்திரத்திலும் பன்னிரண்டாதிபதி வெள்ளி எட்டாதிபதி சனியுடன் கூடியும் நிற்றல்.

| | | | |
|---|---|---|---|
| | கே | வி | சந் ல |
| | | | சூ சனி பு,வெ |
| | | | செ |
| | | ரா | |

# இலங்கை சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி சங்கத்தின் மாசி மாதக் கூட்டம் 26-2-84 ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 3-20 மணிக்கு திரு. செ. ந. நடராஜன் தலைமையில் ஆரம்பமாயிற்று. திரு. வே. சின்னத்துரை அவர்கள் மட்டக்களப்பு பிரபல சோதிடரும் அங்கே சோதிடமாநாட்டை நடத்தி வைத்தவருமான திரு. சித்திவிநாயகம் அவர்களின் மறைவுக்காக ஒரு அனுதாபத் தீர்மானம் கொண்டு வந்து அதை அவருடைய குடும்பத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சென்ற கூட்ட அறிக்கையும், பொருளாளர் அறிக்கையும் வாசித்தபின் தலைவர் முன்னுரையில் பிரதம பேச்சாளரை அறிமுகப்படுத்தி பேச்சாளர் எடுத்த பொருள் பற்றி கூறினர். பின்பு பிரதம பேச்சாளரான விரிவுரையாளர் திரு. பி. இரகுபதி அவர்கள் 'சோதிடத்தில் பலன்கூறல் தொடர்பான அடிப்படைச் சிக்கல்கள்'' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினர். தனி மனிதனின் பிரச்சினைக்குரிய சோதிடம், ஒரு தேசத்துக்குரிய சோதிடம் (Mundane Astrology), காலநிலை பற்றிய சோதிடம், சூழல் சம்பந்தமான சோதிடம் இருக்கிறதென்றும் கூறினர். பலன் கூறும்போது பல உத்திகளைக் கையாள்வதைப் பற்றிக் கூறினர். முதலாவது கிரகநிலையை ஆதாரமாகக் கொண்டும் முன்னோர்கள் கண்டு பயனடைந்த அனுபவக் கோவையைக் கொண்டும், மற்றது சோதிட பலன் கூறுபவரது மன நிலையையும் பொறுத்ததுவே பலனின் நிலை. இந்த மூன்று நிலையில் ஒன்று தவறுமாயின் சோதிட பலன் பிழைத்துவிடும். அனுபவ கோவையும் 100க்கு 100 சரியென நாம் எடுக்க முடியாது. ஏனெனில் ஒரு காலத்தின் பின்பு நம்மவர்கள் ஒருவித ஆராயச்சியும் செய்யாததினல் அனுபவ கோவை முற்று முழுதுமானதல்ல என்றார். விஞ்ஞானம் எதையும் தத்வரூபமாகக் காட்டவல்லது. அது எங்கிருந்தாலும் அதன் நிலை மாறுவதில்லை. ஆனல் கலை என்பது மாறுபடக்கூடியது. பிறநாட்டார்கள் சில சில தரவுகளைக் கொண்டு யூகத்தில் சில பலன்களைக் கூறுவார்கள். இந்துக்களும் அப்படியேதான் செய்தார்கள். ஆனல் அவர்கள் தம்முடைய அனுபவத்தையும் சேர்த்துக் கொண்டதால் பலன் கைகூடியது. பிறநாட்டவர் யூகத்தில் பலன் சொல்வதால் தவறுதலும் ஏற்படும். இப்போ சரியாக சோதிடத்தில் பலன் கூற வேண்டுமானல் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும். புதிய தரவுகளை கண்டுபிடிக்க வேண்டும். கடைசியாக ஆராய்ச்சி வராகமிகிரருடன் நின்றுவிட்டதென்றார். எல்லாவற்றுக்கும் கவனிப்பும் ஆராய்ச்சியும் செய்து புதிய தரவுகளை ஒருவரும் செய்யவில்லை என்றார். ஆதலால் இவ்வாராய்ச்சி மன்ற அங்கத்தவர்கள் தமது வாழ்நாளில் இத்துறையில் ஆராய்ச்சி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்பு மாலை 5-15 மணியளவில் இனிது கூட்டம் நிறைவேறியது.

---

சலரோ...... (21-ம் பக்கத் தொடர்)

| | | | |
|---|---|---|---|
| சூ | பு, ல ரா, சந் சனி | | |
| | | | |
| செ வெ | | | |
| | | வி கே | |

பன்னிரண்டாதிபதி வியாழன் சனி ராகுவினல் தாக்கப் படலும் 10-ல் நிற்றலும் செவ்வாய் லக்னத்தில் நிற்கும் சனி ராகு சந்திரனைப் பார்ப்பது.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | செ கே |
| | | | |
| | | | சூ, பு |
| ரா | ல சனி | வெ | வி |

1. லக்னத்தில் சனி நிற்றல்.
2. ஆருதிபதி செவ்வாய் கேதுவுடன் 8-ல் நிற்றல்.
3. எட்டாதிபதியை சனி பார்த்தல்.
4. செவ்வாய் 8-ல் நின்று வியாழனைப் பார்த்தல்.
5. வியசாழன் கன்னியில் நிற்றல்.
6. வெள்ளி 12-ல் மறைவுஸ்தானத்தில் நிற்றல்.

# ஆய்வு மன்றம்

சோமசுந்தரம் மோகனதாஸ்,
55, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உமது சாதகம் கணிப்பில் தவறுகள் இருக்கின்றன. (உமது செனன நட்சத்திரம் பூராடம் 1-ம் பாதம். மூலம் என்று உமது சாதகத்தில் குறிப்பிட்டிருக்கலாம். சோதிட உண்மைகளை தெரியாத சோதிடரால், தவறுகக் கணித்து வெளிவரும் பஞ்சாங்கங்களின் உதவியுடன் உமது சாதகம் கணிக்கப்பட்டிருக்கலாம்.) முதலில் உமது சாதகத்தை, நல்ல தரமான கணித சோதிடரிடம் காட்டித் திருத்தம் செய்து பின்பலன்களை அறியும்படி ஆலோசனை கூறுகின்றோம்.

சரியான கணிப்பின்படி 1983ல் சூரியன் தசை ஆரம்பமானவுடன் சகடயோக காரணுகிய உமக்கு துன்பங்கள் தொடர்ந்தன. சந்திரன் தசை வரும் போது மீண்டும் பழைய நிலை வரலாம். எங்கு சென்றாலும் கடவுள் பக்திதான் உமக்குத் துணை என்பதை மறக்க வேண்டாம். கடவுளை நம்பிக் கடமைகளைச் சரியாகச் செய்து வரவும்.

T. ஜெயா, திருக்கோணமலை.

விவாகம் நடைபெறின், வரனில் ஏதொரு வகையிலாவது சொல்லக்கூடிய அச்சம் அமைந்திருக்கும்.

பாக்கியநாதன் சாந்தவதனி,
26. புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

இந்தச் சாதகக்கணிப்பில் பல தவறுகள் தெரிகின்றன. தவறான கணிப்பில் இருக்கும் சாதகங்களின் பலனும் சரியாக அமையாது. தரமான கணித சோதிடரைச் சந்தித்துச் சாதகத்தைச் சரியாகக் கணிப்பித்துப் பலன்களை அறியும்படி ஆலோசனை கூறுகின்றோம்.

குறிப்பு:- ஆய்வு மன்றப் பகுதிக்கு விண்ணப்பம் செய்வோர் பிறந்த திகதி நேரம் (மணி. நிமி) இரவு பகல் முதலியவற்றை விளக்கமாகக் குறிப்பிட வேண்டும். உங்கள் கஷ்டங்கள் பிரச்சினைகளைத் தெளிவாகத் தனியாக எழுதி இப்படிவத்துடன் இணைத்து 'சோதிடமலர்' ஆய்வு மன்றம், திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்த ஒழுங்கின்படியே பதிலளிக்கப்படும். ஒரு விண்ணப்பத்தில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ..........................................................

விலாசம்: ..........................................................

பிறந்த திகதி: ஆங்கிலம் ..........................................

தமிழ் ..........................................

,, நேரம்: ..........................................

,, இடம்: ..........................................

கிரகநிலை

ஜனனகாலம்.................... தசை இருப்பு

வரு........மா.........நாள்.........

....................................

கையொப்பம்

## கும்ப லக்ன ஆணும் மேட லக்னப் பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலன்கள்

வே. சின்னத்துரை, நல்லூர்

மீன லக்ன ஆண் ஒரு நேசிக்கப்படக்கூடிய தன்மை கொண்ட குணதிசயம் நிறைந்த வர். அவருடைய புரியாத உள்ளுணர்வும் அவவுடைய நோக்கங்களிலும் லட்சியங்களிலும் தான் கலந்துகொள்ள வேண்டுமென்னும் அவாவுடன் அவளுக்கு இவர் ஓர் நல்ல கூட்டாளியாக அமைவார். ஆனல் இது ஒரு சிக்கலான உடன்பாடு ஆகலாம். பிழையான எண்ணத்தை நீக்குவதிலும் சோர்வுற்றபோது அவளுடைய பலமும், தேற்றமும் இவருக்குத் தேவைப்படும். இவருடைய சிறுபிள்ளைத்தனத்துக்குகந்த முறையில் தன்னைத் தான் ஆக்கிக்கொண்ட அதே சமயம் அவர் திடீரென தான் ஒரு பெண்ணைக் காக்கும் ஆளாக மாறுவார். இருந்தாற்போல் அவர் தன்னுடைய இரகசிய உலகத்திற்குள் தான் பின்வாங்கிக் கொள்வார். இந்நேரத்தில் அவள் முற்றுமுழுதாக வெளியில் எறியப்பட்டவளாகிறுள். தன்னுடைய புதுப் பிரச்சினைகளில் அவளைச் சேர்க்காமல் மூழ்கியிருப்பார். தன்னுடைய திட்டங்களில் தலையீடு வருமளவும் அசட்டை செய்துவிட்டு சகல முடிவுகளையும் அவளில் பாரப்படுத்திவிட்டு அவர் சந்தோஷமாக இருப்பார். அவரை அவள் பாதுகாப்பது அவருக்கு துப்பரவாகத் தெரியாது. எப்படியெனினும் அவளை மாற்றியமைக்க அவருக்கு விருப்பமின்மையும் அவரைச் சூழ இருக்கும் அன்பிலேயே தன்னைத்தான் அவள் கழற்றிக்கொள்ள அவள் முடிவெடுப்பாள்.

பால் ரீதியில் மீனலக்கின ஆண் தன்னை தக அமைவாக்கிக் கொள்வார். ஆனல் உணர்ச்சி வசமாவார். இது விடயத்தில் விமரிசனங்களை இவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். காதல் செய்யும்போது காமத்தில் ஊறு செய்யும் மனப்பான்மை இவருக்கிருக்கும். இதில் அவள் தன்னில் நம்பிக்கை இல்லாதவள் என இவர் நினைத்துவிடுவார். பின்பொருகால் இதுபற்றி ஒரு காலமுமே பேசப்பட்டால் அவர் மிகவும் பயந்து போவார். மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து மது வருந்தப் போதல் இவருடைய பாலியல் வாழ்வில் தலையீடுகளை உண்டாக்கும். இதனுல் அவள் விரக்தியால் பாதிக்கப்படுவாள். படுக்கை நேரம் அவருக்கு விளையாட்டு நேரமாகும்.

இது ஒரு நல்ல கூட்டுறவு.


# "சோதிட மலர்"

**7-வது ஆண்டுச் சிறப்புமலர்**

எதிர்வரும் சித்திரை இதழ் 7-வது ஆண்டுச் சிறப்புமலராக வெளி வரவிருக்கின்றது. இச் சிறப்புமலர்

★ நட்சத்திர ரீதியில் ஒவ்வொருவரினதும் பலாபலன்கள்

★ புத்தாண்டில் உலகப் பலாபலன்கள்

என்பனவற்றுடன் பல சோதிட அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள், கவிதைகள் என்பனவற்றை உள்ளடக்கி அதிக பக்கங்களுடன் மலரவிருக்கின்றது என்பதை மன மகிழ்வுடன் தெரிவிக்கின்றேம்.

• உங்கள் பிரதிகட்கு முன்கூட்டியே ஏஜண்டுகளிடம் பதிவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்.

# செவ்வாய் தோஷம்

வே. சின்னத்துரை, நல்லூர்.

(தை இதழ் தொடர்)

1. செவ்வாய் தோஷமே அற்றவர்கள். இவை சுத்த ஜாதகம் எனப்படும்.
2. சாதகத்தில் தோஷமுண்டு. ஆனுல் விதி விலக்கால் தோஷம் நீங்கியது.
3. ஒரு விதத்திலும் தோஷம் நீங்காத சாதகம்.

ஆகையால் இதை மனதில் வைத்துக் கொண்டு அந்த அந்தச் சாதகத்திற்கு பொருத்தமான சாதகத்தை தெரியவேண்டும்.

கொள்கை வித்தியாசம், ஒத்துப்போகாமை, விரோதம், பிரிவினை பிணக்கம் முதலியவற்றை கொடுப்பது செவ்வாய்க் கிரகம் மட்டுமல்ல. எந்தக் கிரகமும் இவற்றை உண்டாக்க வல்லது. அக்கிரகத்தின் புத்தி நாதன் 6,10, அல்லது 12-ம் வீட்டைக் குறிகாட்டின் அல்லது அப்புத்தி நாதன் நிற்கும் நட்சத்திராதிபதி 6,10,12-ம் வீட்டைக்குறி காட்டுமாயின் இக்கோளாறுகளை உண்டாக்கும்.

அதேகிரகம் 2, 7, 11-ம் வீட்டையும் குறி காட்டுமாயின் இக்கோளாறுகள் கொஞ்சக் காலத்திற்கு இருந்து பின்பு ஒற்றுமையாக வாழ்விக்கும். அக்கிரகத்தின் புத்தி நாதன் செவ்வாயாகுமானுல் அல்லது செவ்வாயின் நட்சத்திர அதிபதியானுல் அது 6,10,12 ஐக் குறி காட்டுமானுல் பயங்கரம், பலாத்காரம் தோன்றி பிரிவினையை ஏற்படுத்தும். அது சரியானுல் நிசப்தமும், ஊமைபோலிருந்து வேலை நிறுத்தம் செய்யும்.

இனி சில சோடிகளின் சாதகங்களை ஆராய்வோம்.

| | | | |
|---|---|---|---|
| | சந், செ | | ரா |
| வி | ஆண் | | |
| வெ | | | |
| சூ,கே,ல,பு | சனி | | |

லக்னம் தனு செவ்வாய் மேடம் 5-ல்
சந்திரன் ,, ,, 1-ல்
வெள்ளி ,, ,, 4-ல்

சந்திரனிலிருந்து 1 லும், வெள்ளியிலிருந்து 4 லும் செவ்வாய்க் குற்றம் விதி விலக்கு 1 ஞலும் 8 ஞலும் தோஷம் நீங்கப்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| | ரா | | சந்,வி,செ |
| | பெண் | | |
| | | | |
| சனி | | வெ, கே | சூ,ல, பு |

லக்னம் கன்னி செவ்வாய் மிதுனம் 10-ல்
சந்திரன் மிதுனம் ,, ,, 1-ல்
வெள்ளி துலாம் ,, ,, 11-ல்

சந்திரனிலிருந்து 1-ல் தோஷம் விலக்கு 9 ஞலும் 8 ஞலும் தோஷம் நீக்கப்பட்டது.

இச்சோடிக்கு செவ்வாய் தோஷமிருந்தும் விதி விலக்கால் குற்றமகற்றப்பட்டது இப்போ 32 வருடமாக சுகசீவிகளாக ஒற்றுமையாக வாழ்கிருர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | வி | கே |
| சூ, பு, ல | ஆண் | | சனி |
| வெ | | | சந் |
| ரா | | | செ |

லக்னம் கும்பம் செவ்வாய் கன்னி 8-ல்
சந்திரன் சிங்கம் ,, ,, 2-ல்
வெள்ளி மகரம் ,, ,, 9-ல்

இங்கு லக்கினத்திலிருந்தும் சந்திரனிலிருந்தும் செவ்வாய்க்கு குற்றமுண்டாயது. ஆனுல் விதி விலக்கு 7-ல் குற்றம் நீங்கியது.

| | | | |
|---|---|---|---|
| வெ | சூ | பு, செ | |
| கே | பெண் | | |
| சந் | | | ரா |
| | | ல, வி | சனி |

லக்னம் துலாம் செவ்வாய் இடபம் 8-ல்
சந்திரன் மகரம் ,, ,, 5-ல்
வெள்ளி மீனம் ,, ,, 3-ல்

இங்கு லக்கினத்திலிருந்து செவ்வாய்க்கு குற்ற மேற்பட்டது. ஆனுல் விதிவிலக்கு 7-ல் குற்றம் நீங்கியது.

இச்சாதகத்திலும் இருவருக்கும் செவ்வாய் தோஷமிருந்தும் விதிவிலக்கால் குற்றமகற்றப்பட்டன. இப்போ 38 வருஷமாக சுகசீவிகளாக ஒற்றுமையாக வாழ்கிருர்கள். (தொடரும்)

# சோதிடம் கற்போம்

"ஞானி"

இதுவரை வெளிவந்த சோதிடப் பாடங்களி லிருந்து ஒரு குறிப்பிட்ட ஜனன நேரத்துக்கு உதய லக்கினம், இராசிநிலை, கிரகஸ்புடம், பாவ ஸ்புடம், நவாம்சநிலை என்பன கணிக்கத் தெரிந்து கொண்டோம். அடுத்து கிரகபலம் அதாவது கிரகங்களுக்குரிய நட்பாட்சி உச்சம், கிரகபார்வை என்பவற்றை இப்பொழுது ஆராய்வோம்.

### கிரக நட்பாட்சி முதலியன:

இராசிச் சக்கரத்தில் ஒரு கிரகம் உச்சம் அல்லது ஆட்சி பெற்றிருப்பதால் வலிமை கூடியது என்றும், நட்புப் பெற்றிருந்தால் நடுத்தர பலன் என்றும்- பகை அல்லது நீசம் அடைந்திருப்பின் வலிமையற்றதெனவும் சொல்லப்படும். திருக் கணித பஞ்சாங்கம் 12-ம் பக்கத்தைப் பார்க்கவும். ஜாதகத்தில் இராசி நிலையில் எந்தக் கிரகம் எந்த இராசியில் நிற்கிறதோ அதேபோல் அந்த ராசி யில் அந்தக் கிரகத்தின் வலிமையை இப்பக்கத் தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணம் i. சூரியன் இராசி நிலையில் இடப ராசியில் நிற்பதாக வைத்துக்கொண்டால் பஞ் சாங்கத்தில் இடபராசியில் சூரியன் பகை எனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

ii. மேடத்தில் செவ்வாய் 10 பாகை என வைத்துக்கொண்டால் பஞ்சாங்கத்தில் மேட ராசி யில் செவ்வாயைப் பார்க்க 12 மூலத்திரிகோணம் 18 ஆட்சி எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. அதா வது மேடத்தில் செவ்வாய் 0 முதல் 12 பாகை வரை மூலத்திரிகோணம் என்றும், மிகுதி 18 பா கையும் ஆட்சி எனவும் கொள்ள வேண்டும். எனவே செவ்வாய் 10 பாகையில் இருப்பதால் செவ்வாய் இவ்விராசியில் மூலத்திரிகோண பல முடையது.

iii. கன்னி ராசியில் 18 பாகை என வைத் துக் கொண்டால் பஞ்சாங்கத்தில் பார்க்கும்போது கன்னியில் புதன் 15 உச்சம் 5 மூலத்திரிகோணம் 10 ஆட்சி என்றிருக்கிறது. அதாவது 15 பாகை வரை உச்சம் என்றும் அதன்மேல் 5 பாகை (15 முதல் 20 வரை) மூலத்திரிகோணம் எனவும் மிகுதி 10 பாகை (20 முதல் 30 வரை) ஆட்சி எனவும் அறிந்து கொள்க. எனவே இவ்விராசியில் புதன் 18 பாகையில் இருப்பதால் மூலத்திரிகோண பல முடையது.

iv. மேடத்தில் சூரியன் 10 உச்சம் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது மேட ராசி முழுவதும் சூரியன் உச்சம் என்று கூறினும் 10-வது பாகையில் மட்டுமே சூரியன் அதி உச்ச பலனைக் கொடுப்பார்.

v. துலாத்தில் சூரியன் 10 நீசம் எனக் குறிக் கப்பட்டிருக்கிறது. அதாவது சூரியன் 10 ஆவது பாகையில் பரம நீசம் அடைகிறார். இப்படியே ஏனைய கிரகங்களை இராசிநிலையில் பார்த்து எல் லாக் கிரகங்களுக்கும் கிரக பலத்தை அறிந்து கொள்க.

அத்துடன் பஞ்சாங்கத்தில் அதே பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு கிரகங்களின் தற்கால சத்துரு மித்திர தன்மைகளையும் அறிந்து கொள் ளல் வேண்டும்.

### கிரக பார்வைகள்

இந்து சோதிடத்தில் கிரகபார்வைகள் பின் வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

குருவிற்கு 5, 7, 9ம் வீடுகள் பார்வை.
சனிக்கு 3, 7, 10ம் வீடுகள் பார்வை.
செவ்வாய்க்கு 4, 7, 8ம் வீடுகள் பார்வை.
ஏனைய கிரகங்களிற்கு 7வது வீடு மட்டும் பார்வை.

எல்லாக் கிரகங்களுக்கும் பார்வை உண்டு. அவை ஒன்றுக்கொன்று இருக்கும் தூரத்தைப் பொறுத்து நற்பார்வை, தீயபார்வை என வகுக் கப்பட்டுள்ளது. கிரகங்களின் இடைத்தூரம் 60, 90, 120, 180 பாகைகளாக இருக்கும்போது அப் பார்வைகள் மிக முக்கியமானதாகக் கொள்ளப் படும்.

| | | |
|---|---|---|
| 60 பாகை | அர்த்த திரிகோணம் | நன்மை |
| 90 பாகை | சதுரஸ்ரம் | தீமையானது |
| 120 பாகை | திரிகோணம் | மிகநன்று |
| 180 பாகை | எதிர்பார்வை | நன்மையற்றது |

கிரக பார்வை பற்றிய முழு விளக்கத்தையும் கடந்த கார்த்திகை, மார்கழி மாதச் சோதிட மலர் இதழ்களில் வெளியான கிரகபார்வை என்ற கட்டுரையை வாசித்து நன்கு விளங்கிக்கொள்க.

# மணப்பந்தல்

| | | | |
|---|---|---|---|
| | | சூரி பு,சுக் | குரு கே |
| | கிரகநிலை | | |
| | | | |
| ல ர,குஜ | | சனி | சந் |

**ஜாதகம்: இல. 56 பெண்**

*பிறந்த திகதி: 14-5-1954* *நேரம்: 9-30 p.m.*

*நட்சத்திரம்: சித்திரை 1-ம் பாதம்*

இவர் சைவ வேளாண் மரபில் உதித்து க. பொ. த. (உ. த.) படித்தவர். அரசாங்க கூட்டுத்தாபனங்களில் அல்லது ஆசிரியத் தொழில் புரியும் மணமகன் தேவை. சீதனமாக 1½ லட்சம் ரூபா பெறுமதியான வீடு வளவும், 50,000 ரூபாவுக்கு நகையும், ரூபா 50,000 பணமும் கொடுக்கப்படும். சைவ உணவாளியான மணமகன் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | குரு | | சூரி சுக் |
| ரா | கிரகநிலை | | பு |
| லக் | | | கே |
| | | செ | சந் சனி |

**ஜாதகம்: இல. 57 பெண்**

*பிறந்த திகதி: 29-6-1952* *நட்சத்திரம்: உத்தரம் 3-ம் பாதம்*

சைவ வேளாண் மரபில் சேர்ந்த நல்ல அழகும், நற்குணமும் கொண்ட இவர் ஓர் கலைப்பட்டதாரியும், கல்வி டிப்புளோமா பட்டமும் பெற்றவர். தற்போது ஆசிரியையாகக் கடமை புரிகிறார். இதே மரபிலுள்ள பிறப்பெண் 7, 3, 6, அல்லது 1 ஆக உள்ள வரன் தேவைப்படுகிறார். சீதனமாக ரூபா 1 லட்சமும், இரு கடைகளுடன் கூடிய வீடுவளவும், போதிய நகையும் வழங்கப்படும். வரனின் தரத்திற்கேற்ப சீதனம் கூடுதலாக வழங்க முடியும்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | ரா | லக் |
| | கிரகநிலை | | சனி |
| | | | |
| | சுக் கே | பு,கு செ | சூ |

**ஜாதகம்: இல 58 பெண்**

*பிறந்த திகதி: 10-10-1946* *நேரம்: 11-55 p. m.*

*நட்சத்திரம்: ரேவதி 2-ம் கால்*

சைவ வேளாண் குலத்தைச் சேர்ந்த நல்ல அழகும், நற்குணமும் பொருந்திய இவர் ஓர் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியையாகப் பணி புரிகின்றார். அதே மரபிலுதித்த பிறப்பெண் 4, 8, 5, 3 ஆக உள்ள வரன் வேண்டும். சீதனமாக ரூபா 50,000 உம், வீடுவளவும், போதிய நகையும் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | | செ சனி | |
| சந் | கிரகநிலை | | ரா |
| கே | | | ல குரு |
| சூ புத | வெ | | |

**ஜாதகம்: இல. 59 பெண்**

*பிறந்த திகதி: 30-12-1943*

*நேரம்: இரவு 9-33 p. m.*

*நட்சத்திரம்: அவிட்டம் 3-ம் கால்,*

சிறப்புப் பட்டம் பெற்ற பட்டதாரியான இப்பெண் ஆசிரியையாகப் பணி புரிகின்றார். வேதனம் ரூபா 1200/-. சீதனவிடயம் நேரில் பேசப்படும்.

| | | | |
|---|---|---|---|
| சனி | | கே | வெ |
| | கிரகநிலை | | |
| சந் | | | ல சூ,பு |
| வி | செ ரா | | |

**ஜாதகம்: இல. 60 ஆண்**

*பிறந்த திகதி: 21-8-1937*

*நட்சத்திரம்: திருவோணம்*

ப. நோ. கூ. சங்கமொன்றில் கிளை முகாமையாளராகப் பணி புரியும் இவர் உயர்வேளாண் குலத்திற் பிறந்தவர். சைவ உணவாளியான இவருக்கு சைவ உணவாளியான மணமகள் வேண்டும். ஜாதகப் பொருத்தத்தை விட மனப் பொருத்தம் விரும்பத்தக்கது.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 23

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1: கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்

2: 1-4-1984க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3; சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்ருவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.

4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 23
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | க் 2 | 3 | 4 | | 6 |
| | 8 | ர 9 | 10 | | 12 |
| 13 | மா 14 | 15 | | 17 | ன் 18 |
| 19 | 20 | | 22 | ரோ 23 | 24 |
| ப 25 | 26 | 27 | ல் 28 | 29 | ன 30 |
| 31 | | 33 | 34 | | |

பெயர் ..............................................

விலாசம் ..............................................

..............................................

இடமிருந்து வலம்:

1. இன்னும் ஓர் மாதத்தில் இப் புத்தாண்டு பிறந்துவிடும்.
8; வலமிடமாகப் பார்த்தால் மேட ராசிக்குரிய நட்சத்திரமொன்றைக் காணலாம்.
13. சூரியன் ஒவ்வோர் ராசியிலும் சஞ்சரிக்கும் காலத்தை அடிப்படையாக வைத்து இக்காலப் பிரிவை வகுத்துள்ளனர். குழம்பியுள்ளது:
17. இராசியொன்றின் கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.
19. இதன் முன் 'வ' சேர்க்க 'காடு' உருவாகும்.
22: நண்பனின் எதிர்ப் பதத்தைக் குறிக்கும் இச்சொல் வருஷத்தையும் குறிக்கும்.
25, சூரியோதயம் முதல் அஸ்தமனம் வரையுள்ள பகலினளவு குழம்பியுள்ளது.
33: மாறியிருக்கும் இதில் 64 வகைகளுண்டு.

மேலிருந்து கீழ்:

2. நவரத்தினங்களில் சூரியனுக்குப் பிரீதியாகப் பயன்படுவது இது. ஒழுங்கற்றுள்ளது.
3. இலக்கினத்திற்கு 7ம் இடம் இதனைப்பற்றி அறிய உதவும்.
4. பறவையைக் குறிக்கும் வடசொல் தலைகீழாகவுள்ளது.
6; நவக்கிரகங்களின் நடுநாயகன் ஒழிந்திருக்கிருன்.
17. ஜாதகத்தில் 6ம் இடம் இதற்குரிய ஸ்தானமாகும். முதலிரு எழுத்துக்களும் இடம் மாறியுள்ளன.
22. தலைகீழான இதற்குக் காரகன் புதனுகும்.
27. சூரியன் அஸ்தமனமாகும்பொழுது இது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 22ன் விடைகள்.**

இடமிருந்து வலம்:

1. காலவிதானம் 7. மருத நிலம் 13. தம்பதி
21. சித்தம் 29. மதி 32. உச்சம்

மேலிருந்து கீழ்:

1. காலயுக்தி 2. பலம் 3. விருச்சிகம் 4. தாமதம்
5. தன(ம்) 6. நித்திலம் 23. மதம்

பரிசு பெறுவோர்:

1-ம் பரிசு: செல்வி. ச. சத்தியவதி,
நல்லாதேர்லே, வதிரி,
கரவெட்டி.

2-ம் பரிசு: செல்வி. வித்தியாரூபிணி செல்லையா,
1, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

3-ம் பரிசு: வி. கே. தங்கராசா,
உப தபாலகம்,
மாவடிச்சேனை.

காலம் பெறுமதியானது!

காலத்தை வீணாக்காதீர்கள்!!

தந்தி: மில்க்வைற்

தொலைபேசி: 23233




துரிதமான சலவைக்கு மில்க்வைற் நீலசோப்

# மில்க்வைற் தொழிலகம்

யாழ்ப்பாணம்

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

கடந்த 6 ஆண்டுகளாக தாங்கள் "சோதிடமலருக்கு" நல்கிவரும் ஆதரவிற்கு நன்றி. எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டில் 7-வது ஆண்டுமலர் பல விசேட அம்சங்களுடன் நறுமணம் கமழ இருக்கிறது.

சந்தாநேயர்கள் 7-வது மலருக்கான சந்தாத்தொகையை 1-4-84 க்கு முன் செலுத்தி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். சந்தாப்பணம் அனுப்பும் போது தயவு செய்து சந்தா இலக்கத்தையும் விலாசத்தையும் குறிப்பிடவும்:

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ | 40-80 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல்வழி) | வருட சந்தா | ,, | 78-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, | 150-00 |
| | இங்கிலாந்து (விமான வழி) | வருட சந்தா | ,, | 175-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.

விற்பனையாகின்றது!

ரக்தாக்ஷி வருஷ

# திருக்கணித பஞ்சாங்கம்

(1984-85)

❋ சுத்தமான கிரகநிலை அறிவதற்கும்
❋ சமய அனுஷ்டானங் களுக்கும்
❋ எதிர்காலப் பலன்களைத் தெளிவாக அறிவதற்கும்

சிறந்தது

மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று

❋

முன்னணியில் திகழ்வது

( திருக்கணித பஞ்சாங்கம் )

விலை ரூபா 14-00 (தபாற் செலவு வேறு)

❋ வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் உண்டு.

விலாசம்: — திருக்கணித நிலையம் —

மட்டுவில் — சாவகச்சேரி

Edited by K. Sathasiva Sarma: Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280